தமிழர் பொருண்மியம்
வாரமலர்
TAMILS ECONOMY
விலை - 50/=
இதழ் - 36
20.09 2023



நம்பிக்கை ஏற்படுத்தும் ஆணித் தொழிற்சாலை 02

# ஏலக்காய் பயிர்ச்செய்கை முறை



50ரூபாவில் தொடங்கி 2 இலட்ச ரூபாய் வரை... 12

யாழ். நகரிலும் “பிக்-மீ” சேவை 21

தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04

# நம்பிக்கை ஏற்படுத்தும் ஆணித் தொழிற்சாலை



- இந்துமதி -

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் பலரும் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டு வெளிநாடுகளுக்கு செல்வதற்கு முற்பட்டுள்ள ஒரு நிலைமையில் வெளிநாட்டிலிருந்து வந்து புதிய தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பித்திருக்கின்றார் தயாபரன்.

மத்திய கிழக்கு நாடுகளான கட்டாரிலும், டுபாயிலும் இரண்டு தசாப்தங்களாகப் பணியாற்றியதன் மூலம் சேமித்த பணத்தில் சுமார் இரண்டு கோடி ரூபாவை முதலீடு செய்து ஆணித் தொழிற்சாலை ஒன்றை சுழிபுரம் மத்தியில் கடந்த மே மாதம் 7ஆம் திகதி ஆரம்பித்துள்ளார் தயாபரன். 43 வயதான சண்முகரத்தினம் தயாபரனைப் பொறுத்தவரையில் இது அவரது இலட்சியக் கனவு. அந்தக் கனவை அவர் நினைவாக்க எதிர்கொண்ட சவால்கள் பல.

எவ்வளவு காலத்திற்குத்தான் நாம் வெளிநாடுகளில் பணிபுரிந்து பணத்தை அனுப்பி கொண்டிருப்பது? என்ற கேள்வியுடன் சொந்தமாகத் தொழில் ஒன்றைத் தொடங்கிய பலருக்கு வேலை வாய்ப்பை கொடுத்து நாட்டினுடைய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தத் தொழிற்சாலைக்குத் தான் முத லீட்டை செய்ததாக "தமிழர் பொருண மியம்" வார இதழுக்கு அளித்த பேட்டியில் தயாபரன் தெரிவித்தார்.

நாட்டில் உருவாகியிருக்கும் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தொழில் நிபுணத்துவ சேவையில் உள்ளவர்கள் உட்பட பெருந்தொகையான மக்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்று கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில்தான் தயாபரன் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து புதிய தொழில் முயற்சியாக இந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்து இருக்கின்றார்.

இதற்கான காரணம் என்ன எனக் கேட்டபோது, அவர் "தொடர்ந்தும் இவ்வாறு வெளிநாடுகளில் தங்கி இருக்க முடியாது. தமது கால்களிலேயே நாங்கள் நிற்கக் கூடிய வகையில் எமது பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும். அதற்காகத்தான் இந்த தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கிறேன்" எனக் கூறினார்.

ஒரு தொழில்முயற்சியாளராகத் தயாபரனின் கனவு தற்போது நனவாகி இருக்கிறது. அதற்காக அவர் கடந்து வந்த பாதை மிகவும் கடினமானது. அதேநேரம், எதிர்காலத்தில் பயணிக்கவுள்ள பாதையும் சவால்கள் நிறைந்தவையாகவே இருக்கப் போகிறது. இவை அனைத்தையும் புரிந்து கொண்ட ஒரு நிலைமையில் தான் அவர் இந்தச் சவால் நிறைந்த முயற்சியில் இறங்கி இருக்கின்றார்.

தயாபரனின் குடும்பம் ஒரு சாதாரண குடும்பம் தான். தன்னுடைய உறுதியால்



தான் இப்போது இவ்வாறு ஒரு தொழில் சாலையின் அதிபராக இருக்கின்றார். அவரது குடும்பப் பின்னணி குறித்துக் கேட்ட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அறுவர் கொண்ட எமது குடும்பத்தில் நான்தான் முதல் பிள்ளை., சுழிபுரம் விக்டோரியா கல்லூரியில் எனது பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தபோதும் பல் கலைக்கழகம் செல்வதற்கு முடிந்திருக்கவில்லை. அந்தச் சமயத்தில் தொழில்நுட்பக் கல்லூரியில் இலத்திரனியல் சார்ந்த கற்கையை ஆரம்பித்தேன். அதுமட்டுமன்றி எனது சகோதரனுடன் இணைந்து வீடுகளில் மின்சார வலையமைப்புக்களை செய்யும் பணியையும் ஒருங்கே முன்னெடுத்து வந்தேன்" என்று தனது குடும்பப் பின்னணியைக் குறிப்பிடுகின்றார் அவர்.

அவருடைய பாடசாலைக் காலத்திற்குப் பின்னரான நாட்கள் இவ்வாறான பணிகளுடன் நகர்ந்து கொண்டு இருக்கையில் யாழ்ப்பணம் கலட்டிச்சந்தியில் நடைபெற்ற சம்பவமொன்று அவருடையை வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது. அது குறித்து அவர் இவ்வாறு விவரிக்கின்றார்:.

"எங்களுடைய பகுதியில் பேருந்தொன்று தீக்கிரையாக்கப்பட்டது. எனது நண்பர்கள் வட்டத்தில் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் எமது பகுதியெங்கும் பதற்றமான நிலைமை காணப்பட்டது. எனது பெற்றோர் வெகுவாக அச்சமடைந்து உயிரைப் பாதுகாப்பதற்காக 2003 ஆம் ஆண்டு பெரும் சிரமத்துக்கு மத்தியில் என்னைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தனர்" என்று தெரிவிக்கின்றார்.

கொழும்புக்குச் சென்ற சண்முகரத்தினம்தயாபரனுக்கு அங்கு வேலை ஒன்றைத் தேடிக் கொள்ள வேண்டிய தேவை இருந்தது. இலத்திரனியல் துறையில் ஓரளவு அனுபவம் அவரிடம் காணப்பட்டமையால் கட்டார் நாட்டில் அத்துறை சார்ந்த வேலை வாய்ப்பொன்று இருப்பதை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஊடாக அறிந்து அதற்காகத் தன்னைத் தயார்ப்படுத்தினார். அதற்கான பரீட்சைக்கு முகங்கொடுத்து அதில் சித்தி அடைந்து 2003 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் கட்டாரில் காலடி எடுத்து வைத்தார்.

"கட்டாருக்குச் சென்றதும் குறித்த நிறுவனத்தில் வெறுமனே 'நிறுவனப் பணியாளர்' பதவிக்கே அமர்த்தப்பட்டேன். அந்த நிறுவனம் கட்டுமான துறைசார்ந்த பல்வேறு உற்பத்திகளைக் கொண்டது. பணிகள் கடினமானதாக இருந்தாலும், எனது மேற்பார்வையாளரின் துணையுடன் ஒவ்வொரு பணியையும் படிப்படியாகக் கற்றுக்

கொண்டேன். இது நாளடைவில் எனது பதவி நிலை உயர்வதற்கு வழி வகுத்தது" என்று கட்டாரில் தனது பணி அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் அவர்.

வெளிநாட்டில் வேலை கிடைத்து விட்டாலும் கூட அது அவருக்கு சவால்கள் நிறைந்த ஒன்றாகவே காணப்பட்டது. குறிப்பாக மொழி ரீதியாக எதிர்கொள்ள வேண்டி இருந்த நெருக்கடி, நவீன உபகரணங்களைப் பயன்படுத்துவதில் போதிய அனுபவமின்மை என்பன அவருக்கு கடினமான சவால்களாக இருந்ததாக அவர் குறிப்பிடுகின்றார்.



இந்த சவால்கள் தயாபரனுக்கு மட்டுமானது அல்ல. குறைந்த திறன்களுடன் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்று செல்லும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தான் இது. எனினும் பணியாளர் ஒருவர் தன்னை வளர்த்துக்கொள்வதற்கு, தன்னம்பிக்கையும், அர்ப்பணிப்பும், கடுமையான உழைப்பும் முக்கியமான விடயங்களாக உள்ளன என்று சுட்டிக்காட்டுகிறார் தயாபரன். அவை அனைத்தும் தயாபரனிடமிருந்தால் அந்த சவால்களை அவரால் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது.

இதற்காக தயாபரன் கடுமையாக உழைத்தார். அது தொடர்பாக அவர் இவ்வாறு கூறுகின்றார்:

"சொற்ப காலத்தில் மலையாளம், இந்தி, ஆங்கிலம், அரபு ஆகிய மொழிகளை புரிந்து கொள்வதற்கும், அம்மொழிகளிலேயே பதிலளிக்கக் கூடிய வகையில் என்னை வளர்க்க முடிந்தது. இதனால் அந்நிறுவனத்தில் மேற்பார்வையாளர் பதவியைப் பெற்றுக்கொண்ட நான், பின்னர் டுபாயில் கொரிய நிறுவனமொன்றில் அதனையொத்த பணிக்காக சிபார்சு செய்யப்பட்டு அங்கும் பணியாற்ற ஆரம்பித்தேன். அக்காலப்பகுதியில் தான் தற்போது நான் ஆரம்பித்திருக்கும் தொழிற்சாலைக்கான சிந்தனை தோற்றம் பெற்றது" என்று அவர் குறிப்பிட்டார்.

"கொரிய நிறுவனங்களைப் பொறுத்தவரையில் அவை எந்த நாட்டில் முதலீடுகளைச் செய்தாலும் தமது உற்பத்திகளையே பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றன என்பதை நான் அங்கு நேரடியாகவே கண்டு கொண்டேன். அங்கு நிர்மாணங்களைச் செய்வதற்கான ஆணிகளைக் கூட அந்த நிறுவனம் தனது நாட்டில் உற்பத்தி செய்தே கொண்டு வந்திருந்தது. அப்போது தான் எனது சொந்த மண்ணில் ஒரு தொழிற்சாலையை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை எனக்குத் தோன்றியது" என்கிறார் அவர்.

முதலில் தான் பெறும் வருமானத்தை தந்தையாருக்கு அனுப்பி அதனைச் சிறுகச் சிறுகச் சேமித்ததாகக் கூறும் அவர், 2020 ஆம் ஆண்டில் டுபாயில் இருந்தவாறே தனது நண்பர்களின் உதவியுடன் இந்தியாவில் ஆணிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கான இயந்திரங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

அதன்பிரகாரம், கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத் தொகுதிகள் 2022 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகத்தினை வந்தடைந்தன. இருப்பினும் அக்காலத்தில் கொரோனா தொற்றுநோய் பரவல் காரணமாக துறைமுகச் செயற்பாடுகளும் முடங்கியமையால் இயந்திரங்களை வெளிக்கொணரும் செயற்பாடுகள் மிகக் கடினமான இருந்ததோடு, நிதியிழப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

"எனக்கு இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களை கொழும்பு துறைமுகத்திலிருந்து எவ்வாறு விடுவிப்பது என்பது சம்பந்தமாக போதுமான தெளிவு இருந்திருக்கவில்லை. அத்துடன் கொரோனா காலம் வேறு. மூன்று மாதகால போராட்டத்துக்கு பின்னர் இயந்திரத் தொகுதியை மீட்டு எனது வீட்டுக்கு கொண்டுவந்து சேர்த்தேன். ஆனால் 14 இலட்சம் ரூபா வரையில் அதற்காக விரையமாக்கப்பட்டு விட்டது. ஆனாலும் பொருட்கள் பத்திரமாக மீட்கப்பட்டுவிட்டதில் மகிழ்ச்சி. அது தொழிற்சாலையை ஆரம்பித்து முன்னெடுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையையும் தந்தது" என்று அவர் தனது திருப்தியை வெளியிடுகின்றார்.

அதன் பின்னர் தன்னுடைய அடுத்தகட்ட பணிகளை அவர் ஆரம்பித்தார். அவக சொந்த நிலத்தில் புதல்வாரன அபிஜனின் பெயரில் ஆணித் தொழிற்சாலைக்கான நிறுவனப் பதிவுகளை மேற்கொண்டார். கடந்த மே மாதம் 7ஆம் திகதி உத்தியோக பூர்வமாக தனது தொழிற்சாலையினை இயக்கத்திற்கு கொண்டு வந்திருக்கின்றார் தயாபரன்.

இப்போது தொழிற்சாலை இயங்க ஆரம்பித்து இருக்கின்றது. தன்னுடைய உற்பத்திகள் தொடர்பாக அவர் இவ்வாறு கூறுகின்றார்:

"நாளொன்றுக்கு ஒரு தொன் ஆணிகளை உற்பத்தி செய்யும் வலுவை இயந்திரங்கள் கொண்டிருக்கின்றன. எனினும் கேள்விக்கு ஏற்ற வகையில் தான் அன்றாட உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு, தொகையான கோரிக்கைகளுக்கான உற்பத்திகள் நடைபெறுகின்றபோது மேலதிகமாக இருவருக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன" என்று அவர் குறிப்பிடுகின்றார்.

யுத்த நிலமை காரணமாக குழம்புக்கு இடம்பெயர்ந்து பின்னர் அங்கிருந்து தொழில் தேடி மத்திய கிழக்கு நாட்டுக்கு சென்ற தயாபரன் இப்போது வடக்கில் முக்கியமான ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்திருக்கின்றார். பலருக்கு வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்திருக்கின்றார். இருக்கின்ற மூலப்பொருட்களை பயன்படுத்தி வருமானத்தைப் பெறக்கூடிய இந்தத் தொழில் முயற்சியை ஆரம்பித் திருக்கின்றார்.

போதியளவு தொழில் திறனை அனுபவமோ இல்லாத பலரும் வெளிநாட்டுக்கு சென்று விட்டால் உழைக்க முடியும் என்ற ஒரே நம்பிக்கை படையெடுத்து வரும் நிலைமையில் அவர்கள் அனைவருக்கும் ஒரு முன்னுதாரணத்தை தயாபரன் தந்திருக்கின்றார். நமது நாட்டில் பொதிய அளவு வேலை ஆட்களும் வளங்களும் இருக்கின்ற நிலைமையில் அவற்றை பயன்படுத்தி தொழில் முயற்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கு பலரும் தயங்குகிறார்கள். அந்த சவாலை எதிர்கொள்வதற்கு அவர்கள் அஞ்சுகின்றார்கள். இந்த சவாலை எவ்வாறு எதிர்கொள்ள முடியும் என்பதற்கான ஒரு முன்னுதாரணத்தை தயாபரன் தந்திருக்கின்றார்.

அவ்வாறான நிலையில், மத்திய கிழக்கு நாடுகளில் பணியாற்றினாலும் கூட இறுதி வரையில் தொழிலாளர்களாகவே தொடராது, தொழில் முனைபவர்களாக மாறுவதற்கு தயாபரன் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார்.

உங்கள் முன்பாக இருக்கின்ற சவால் என்ன என்று அவரிடம் கேட்ட பொழுது அவர் எவ்வாறு தெரிவிக்கின்றார்.

"என்னைப்போன்ற உள்ளூர் உற்பத்தியளர்கள் நிலைத்து நிற்க வேண்டுமாயின் உற்பத்திப் பொருட்களுக்கான நிர்ணய விலை ஆகக்குறைந்தது மாகாண, மாவட்ட ரீதியிலாவது உறுதி செய்யப்பட வேண்டும். மூலப் பொருட்களுக்கான விலைகள் தளம்பலடையாது காணப்பட வேண்டும். இவை இருந்தால் நம்பிக்கையுடன் தொழிலை நடத்தி செல்ல முடியும்" என்பது தான் அவருடைய கருத்து அல்லது அனுபவம்.

மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## பேச்சுவார்த்தையும் நிபந்தனைகளும்

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் கொழும்பில் ஆரம்பமாகியிருக்கின்றன. உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புடன் தொடர்புபட்ட சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் எந்தளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பது தொடர்பான ஆய்வுக்காகவே நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இலங்கை வந்து இந்தப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார்கள்.

இந்தப் பேச்சுக்கள் இலங்கைக்கு கொஞ்சம் கடினமானதாக இருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் 57 உடன்பாடுகளில் கடந்த ஆகஸ்ட் மாத இறுதிக்குள் 38ஐ மட்டுமே இலங்கை நிறைவேற்றியுள்ளதாக verite research நிறுவனம் தெரிவித்துள்ளது. அதன்படி, கடந்த மாத இறுதிக்குள், இலங்கை 38 உடன்படிக்கைகளை நிறைவேற்றியுள்ளது, இதனால், இரண்டாவது கட்ட நிதி உதவி தாமதமாகலாம் எனக் கூறப்படுகின்றது.

நிதி வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்தும் இணையத்தளத்தை நிறுவுவதற்கான முக்கிய உறுதிமொழியை நிறைவேற்றுவதை இலங்கை இன்னும் தவறவிட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இது கடந்த மார்ச் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என verite research நிறுவனம் தெரிவித்துள்ளது. இதனை ஏன் செய்யவில்லை என்பதற்கான காரணத்தை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

ஆகஸ்ட் மாதத்தின், இறுதிக்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய 11 உடன்படிக்கைகளின் முன்னேற்றத்தை அளவிடுவதற்கு போதுமான தரவு இல்லை என்பதால் அவை அறியப்படாத பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகஸ்ட் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய 8 உடன்பாடுகளை இலங்கை நிறைவேற்றவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. உடன்படிக்கைகளைச் செய்வதும் பின்னர் அவற்றை நிறைவேற்றாமல் இருப்பதும் இலங்கையின் சரித்திரத்தில் புதிதல்ல.

ஆனால், இலங்கைக்கான இரண்டாவது கடனுதவிக்கான அனுமதி இதன் காரணமாக அக்டோபர் இறுதிவரை தாமதமாகும் எனத் தெரிவிக்கப்படுவதற்கு இவையும் காரணமாக உள்ளன. இரண்டாவது கடன் தவணைக்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் தான் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழு கடந்த வாரம் கொழும்பில் பேச்சுக்களை ஆரம்பித்தது. இந்த மதிப்பாய்வு பெரும்பாலும் ஜூன் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளில் கவனம் செலுத்தும்.

நாணய நிதியத்தின் நிபந்தனைகள் கடுமையானவையாக இருக்கலாம். ஆனால், தற்போதைய நிலையில் மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கான ஆபத்தைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் இந்தப் பேச்சுவார்த்தைகளை இலங்கை அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனும் இராஜதந்திரத்துடனும் முன்னெடுப்பது அவசியம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....




## மிச்சம் பிடித்தால்தான்

வேதநாயகம் தபேந்திரன் கடந்த வாரம் எழுதியிருந்த மிச்சம் பிடித்தால் தான் என்ற தலைப்பிலான கட்டுரை அனைத்துக் குடும்பத்தினருக்கும் பயனுள்ள ஒரு கட்டுரை. பொருளாதார நெருக்கடியையும், விலைவாசி உயர்வையும் நாட்டு மக்கள் எதிர்கொண்டிருக்கும் ஒரு கால கட்டத்தில் இது போன்ற கட்டுரைகள் அவர்களுடைய வாழ்க்கையில் நிச்சயமாக ஒரு திருப்பத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும். மக்கள் தமது அன்றாட வாழ்க்கையில் கையாளக்கூடிய சின்னச்சின்ன விஷயங்கள் மூலமாக குறிப்பிட்ட தொகைப் பணத்தை எவ்வாறு சேமிக்க முடியும் என்பதற்குத் தபேந்திரனின் கட்டுரைகள் உதாரணமாக உள்ளன. மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய இவ்வாறான கட்டுரைகளை தபேந்திரன் தொடர்ந்தும் எழுத வேண்டும். அதற்குப் பொருண்மியம் களமமைத்துக்கொடுக்க வேண்டும் என்ற எமது விருப்பத்தையும் இந்த வேளையில் பதிவு செய்துகொள்ள விரும்புகின்றோம். **லோகநாயகி தங்கவேல். மானிப்பாய்**

## வெற்றிக்கான 5 உத்திகள்

“பிரையன் டிரேசி சொல்லும் வெற்றிக்கான 5 உத்திகள்” என்ற தலைப்பில் கடந்த வாரம் சி.ராம்குமார் எழுதிய கட்டுரை பயனுள்ளதாக இருந்தது. வாழ்க்கையில் வெற்றிபெறுவதற்கு இருக்க வேண்டிய திறன்கள் என்ன என்பதை அவர் மிகவும் இலகுவான முறையில் விளக்கியிருந்தார். இது போன்ற விஷயங்களைப் படிக்கும் போது அது எமக்கு நம்பிக்கையைக் கொடுக்கின்றது. நாமும் இதேபோன்ற நடைமுறைகளைப் பின்பற்றி வாழ்க்கையில் வெற்றிபெற முடியும் என்ற உத்வேகத்தைத் தருகின்றது. இது போன்ற கட்டுரைகள் இளைய சமூகத்தை வழிநடத்த உதவும் என்பதால் தொடர்ந்தும் வெளியிடுங்கள்.

**ரகுராமன், சுழிபுரம்.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1,300 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 2,600 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -

**Green media House (Pvt) Ltd,**
**68, crossette lane, Jaffna.**

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

---------------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ---------------------------------------------------------
**முகவரி** - -------------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - -------------------------------------
**சந்தாக் காலம்** - ---------------------------------------------
**செலுத்திய தொகை** - -----------------------------------------
**செலுத்திய திகதி** - -------------------------------------------



# தங்க நகை விலை

**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,60,740 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,74,650 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**



# கேளுங்கள் தரப்படும்



**கேள்வி -** வெளிநாட்டு விமானிகளைப் பணிக்கு அர்த்துவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. இது பயனளிக்குமா?

**பதில் -** ஆம். இலங்கையின் சிறிலங்கன் விமான சேவையில் இருந்து சுமார் 60 விமானிகள் விலகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இலங்கையில் ஏற்பட்ட ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், வெளிநாடுகளுக்குச் சென்றால் அதிக ஊதியத்தில் வேலை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையிலும், இவ்வாறு அவர்கள் பணியில் இருந்து விலகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கை விமான சேவைக்கு வெளிநாட்டு விமானிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அரசாங்கம் தற்போது அனுமதி வழங்கியுள்ளதாக சிறிலங்கன் எயார் லைன்ஸ் தெரிவித்துள்ளது. விமானிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதன்படி, சர்வதேச நாடுகளின் விமானிகளும் குறித்த பதவிக்கு விண்ணப்பித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், தேசிய விமானச் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான காலம் தொடர்பில் இதுவரை உறுதியான தீர்மானத்தை எட்டவில்லை என சிறிலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. அத்துடன், வெளிநாட்டு விமானிகளுக்கான நேர்காணல் விரைவில் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னரும் வெளிநாட்டு விமானிகள் இவ்வாறு பணிபுரிந்ததாக சிறிலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

ஆனால், உள்நாட்டில் வருமானம் போதவில்லை என விமானிகள் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலையில், வெளிநாட்டு விமானிகளை அழைத்து வருவது எந்தளவுக்குத் தீர்வாகும் என்பது முக்கியமான கேள்வியாக எழுகின்றது. ஏனெனில் வெளிநாடுகளிலிருந்து வரும் விமானிகளுக்கு அதிகளவு சம்பளங்களைக் கொடுக்க வேண்டியிருக்கும். அதனைவிட, தங்குமிட வசதிகளும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். இவை அனைத்தையும் கொடுப்பதைவிட இருந்த விமானிகளைத் தக்க வைத்திருப்பது பொருளாதாரரீதியாக வினைத்திறன் உள்ளதாக அமைந்திருக்கும்.

இலங்கையின் விமான சேவைக்கு விமானிகள் அதுவும் தகுதியும் அனுபவமும் உள்ளவர்கள் தேவைதான். அதற்காக ஏற்கனவே இருக்கக்கூடிய தகுதியான விமானிகளை எவ்வாறு தக்கவைக்க முடியும் என்பதையிட்டு அரசாங்கம் முதலில் கவனத்தைச் செலுத்துவது அவசியம்.

**கேளுங்கள் தருகின்றோம்**

தமிழர் பொருண்மியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி - tamilseconomy@gmail.com



# வடக்கின் சந்தை நிலைவரம்

| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 200/= |
| பச்சைமிளகாய் | - 400/= |
| தக்காளி | - 200/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 200/= |
| கோவா | - 180/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 80/= |
| புடோல் | - 100/= |
| வாழைக்காய் | - 200/= |
| சின்ன வெங்காயம் | - 280/= |
| பெரிய வெங்காயம் | - 220/= |
| பாவற்காய் | - 450/= |
| வெண்டிக்காய் | - 80/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 300/= |
| லீக்ஸ் | - 160/= |
| பீற்றூட் | - 120/= |
| கறிமிளகாய் | - 300/= |
| முருங்கைக்காய் | - 100/= |
| போஞ்சி | - 400/= |
| கத்தரி - தம்புள்ள | - 150/= |



# நாணய மாற்று வீதம்

**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 203/= |
| கனடா டொலர் - | 233/= |
| சீன யுவான் - | 43/= |
| யுரோ - | 340/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 232/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 396/= |
| சுவிஸ் பிராங் - | 353/= |
| அமெரிக்க டொலர் - | 318/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 214/= |
| கனடா டொலர் - | 245/= |
| சீன யுவான் - | 45/= |
| யுரோ - | 356/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 243/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 413/= |
| சுவிஸ் பிராங் - | 372/= |
| அமெரிக்க டொலர் - | 329/= |

# இலங்கையில் பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களின் பொருளாதாரத் தாக்கம்



- அகிலன் -

**அண்மைய தசாப்தங்களில் இலங்கையின் பொருளாதாரம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, இது முதன்மையான விவசாய அடிப்படையிலான பொருளாதாரத்திலிருந்து பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களை அதிகளவில் நம்பியிருக்கும் பொருளாதாரத்திற்கு நகர்கிறது. இந்த மாற்றம் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை உயர்த்துவதில் முக்கியமானது**

உலகெங்கிலும் உள்ள நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வளர்ச்சியில் மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இயற்கை வளங்களுக்குப் பெயர் பெற்ற தெற்காசியத் தீவு நாடான இலங்கை, அதன் பொருளாதாரத்தை மாற்றியமைக்க மதிப்புக் கூட்டல் ஆற்றலைப் பயன்படுத்தியுள்ளது.

இந்தக் கட்டுரையில், இலங்கையை முதன்மையான உதாரணமாகப் பயன்படுத்தி, மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் குறிப்பிடத்தக்க நன்மைகளைப் பற்றி ஆராய்வோம்.

மதிப்புக் கூட்டல்: இலங்கைக்கு ஒரு கேம் சேஞ்சர்

அண்மைய தசாப்தங்களில் இலங்கையின் பொருளாதாரம் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கு உட்பட்டுள்ளது, இது முதன்மையான விவசாய அடிப்படையிலான பொருளாதாரத்திலிருந்து பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களை அதிகளவில் நம்பியிருக்கும் பொருளாதாரத்திற்கு நகர்கிறது.

இந்த மாற்றம் நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் உலகளாவிய போட்டித்தன்மையை உயர்த்துவதில் முக்கியமானது. இலங்கையில் பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களின் சில முக்கிய நன்மைகள் இங்கே:

### ஏற்றுமதியின் பல்வகைப்படுத்தல்:

இலங்கை பாரம்பரியமாகத் தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் போன்ற சில முதன்மை ஏற்றுமதிகளை நம்பியுள்ளது. இந்த மூலப்பொருட்களின் மதிப்பைக் கூட்டுவதன் மூலம், நாடு அதன் ஏற்றுமதி இலாகாவை விரிவுபடுத்தியுள்ளது.

உதாரணமாக, இலங்கைத் தேயிலை அதன் மூல வடிவத்தில் ஏற்றுமதி செய்யப்படுவது மட்டுமல்லாமல், சுவையூட்டப்பட்ட தேநீர், மூலிகைக் கலவைகள் மற்றும் உடனடி தேநீர் கலவைகள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாகவும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த பல்வகைப்படுத்தல், உலகளாவிய பொருட்களின் விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களுக்கு நாட்டின் பாதிப்பைக் குறைக்கிறது.

### அதிக இலாப வரம்புகள்:

பெறுமதி கூட்டல் இலங்கைக்கு அதன் தயாரிப்புகளுக்கு அதிக விலைகளைக் கோருவதற்கு அனுமதிக்கிறது. மூலப் பொருட்களை விற்பனை செய்வதற்குப் பதிலாக, நாட்டில் பதப்படுத்தப்பட்ட மற்றும் பிராண்டட் பொருட்களை விற்க முடியும்.

உதாரணமாக, இலங்கையின் கறுவா அதன் உயர் தரத்திற்காக அறியப்படுகிறது. மற்றும் உலகளவில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. கறுவாப் பட்டையைக் கறுவாப் பட்டை, தூள் அல்லது அத்தியாவசிய எண்ணெய்களாகச் செயலாக்குவதன் மூலம், இலங்கை மதிப்புச் சங்கிலியில் அதிக பங்கைக் கைப்பற்றுகிறது மற்றும் அதிக இலாப வரம்புகளைப் பெறுகிறது.

(09ஆம் பக்கம் பார்க்க)



## வரி விளம்பரம்

## classified advertisement




### வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

### SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு

- 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்




## classified advertisement

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு

A9 வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்

தொடர்புகளுக்கு: 0777 43 5557
தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd




(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அதிக வேலை வாய்ப்பு**

இலங்கையில் மதிப்பு கூட்டப்பட்ட துறையானது, குறிப்பாகக் கிராமப் புறங்களில் ஏராளமான வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. சிறு அளவிலான விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் இப்போது மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை பதப்படுத்துதல், பேக்கேஜிங் செய்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இது வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது மட்டுமன்றி வறுமை ஒழிப்புக்கும் பங்களிக்கிறது.



**தொழில்நுட்பத் திறன் மேம்பாடு:**

மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்திக்கு பெரும்பாலும் மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் சிறப்புத் திறன்கள் தேவைப்படுகின்றன. இந்தத் திறன்களை மேம்படுத்துவதில் இலங்கை முதலீடு செய்துள்ளது, இது பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு வழிவகுத்தது.

எடுத்துக்காட்டாக, இலங்கையின் ஆடைத் தொழில்துறையானது அடிப்படை ஆடை உற்பத்தியில் இருந்து உலகளாவிய வர்த்தக நாமங்களுக்கான உயர்தர ஆடைகளை உற்பத்தி செய்வதாகப் பரிணமித்துள்ளது, மேம்பட்ட இயந்திரங்கள் மற்றும் திறமையான தொழிலாளர்கள்தான் இதற்குக் காரணம்.

**அதிகரித்த அந்நியச் செலாவணி:**

இலங்கை அதிக மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதால், அது அதிக அந்நியச் செலாவணியை ஈட்டுகிறது, இது அதன் பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மைக்கு இன்றியமையாததாகும். இந்த வருமானம் இறக்குமதிகளுக்கு நிதியளிக்கவும், வெளிப்புறக் கடன்களைச் செலுத்தவும், உள்கட்டமைப்பு மேம்பாட்டில் முதலீடு செய்யவும் பயன்படுத்தப்படலாம்.

**உலகளாவிய சந்தை அணுகல்:**

மூலப்பொருட்களுடன் ஒப்பிடும்போது மதிப்புக் கூட்டப்பட்ட தயாரிப்புகள் பெரும்பாலும் பரந்த சந்தை முறையீட்டைக் கொண்டுள்ளன. மசாலாப் பொருட்கள், கைவினைப் பொருட்கள் மற்றும் இரத்தின நகைகள் போன்ற இலங்கையின் பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்புகள் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்று, உலகளாவிய சந்தைகளுக்கான கதவுகளைத் திறந்துவிட்டன.

தரம் மற்றும் தனித்துவத்திற்கான நாட்டின் நற்பெயர் புதிய சந்தைகளை ஊடுருவி வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க உதவியது.

**சுற்றுச்சூழல் நிலைத்தன்மை:**

மூலப் பொருட்களுக்குப் பெறுமதி சேர்ப்பதன் மூலம், இலங்கை நிலையான நடைமுறைகளில் கவனம் செலுத்தி கழிவுகளைக் குறைக்க முடியும். உதாரணமாக, ஒரு காலத்தில் தூக்கி எறியப்பட்ட தேங்காய் மட்டைகள், தற்போது தென்னை நார் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கிறது. மற்றும் முன்பு பயன்படுத்தப்படாத வளத்திற்கு மதிப்புச் சேர்க்கிறது.

**பொருளாதாரப் பின்னடைவு:**

கொவிட்-19 தொற்றுநோய் பொருளாதார மீட்சியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகள் உலகளாவிய இடையூறுகளின் தாக்கத்தைக் குறைக்க உதவின. சில தொழில்கள் பாதிக்கப்பட்டாலும், மற்றவை செழித்து, ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்தன.






# இலங்கையில் மருத்துவர் இடம்பெயர்வின் தாக்கம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில் மருத்துவர் இடம்பெயர்வு ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. அதிக சம்பளம், சிறந்த பணி நிலைமைகள், மேலும் தொழில் முன்னேற்ற வாய்ப்புகள் போன்ற சிறந்த வாய்ப்புகளைத் தேடிப் பல மருத்துவர்கள்நாட்டை விட்டு வெளியேறு கிறார்கள். இது நாட்டின் சுகாதார அமைப்பு, பொருளாதாரம் மற்றும் சிறு வணிகங்க ளில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத் துகிறது.

இலங்கையில் இருந்து மருத்துவர்கள் இடம்பெயர்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. மிகவும் பொதுவான காரணங் களில் சில:

- **பொருளாதார நெருக்கடி:** இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, இது பரவலான வறுமை மற்றும் வேலையின் மையை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவர் கள் இதற்கு விதிவிலக்கானவர் இல்லை. ஆதலினால் பல மருத்துவர்கள் தங்கள் வாழ்க்கையைச் சமாளிப்பது கடினமாக இருப்பதனால் இந்த முடிவினை எடுக்கின் றனர்.
- **குறைந்த சம்பளம்:** இலங்கையில் உள்ள மருத்துவர்களுக்கு உள்ளூர் தரத் தின்படி மிகக் குறைந்த சம்பளமே வழங்கப் படுகிறது. இதனால் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் நடத்த முடியாமல் சிரமப் படுகின்றனர்.
- **மோசமான வேலை நிலைமைகள்:** இலங்கையில் வைத்தியர்களுக்கான பணி நிலைமைகள் பெரும்பாலும் மோசமாகவே உள்ளன. அவர்கள் பெரும்பாலும் அதிக வேலை மற்றும் குறைவான ஊதியம் பெறுகிறார்கள். மேலும் அவர்கள் தரமான பராமரிப்பை வழங்கத் தேவையான ஆதா ரங்களை அணுக முடியாமல் இருக்கின்ற மையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.
- **வாய்ப்புகள் இல்லாமை:** இலங்கை யில் வைத்தியர்களுக்குத் தொழில் முன் னேற்றத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப் புகள் உள்ளன. ஏனெனில் சமீப வருடங்க ளாக நிலவிவரும் பொருளாதார மற்றும் நிதிப்பற்றாக்குறை காரணங்களினால் சுகாதாரத் துறைக்கான பாதீட்டு நிதியை அரசாங்கம் குறைத்து வருவதனை காணக் கூடியதாக உள்ளது.
- **அரசியல் ஸ்திரமின்மை:** சமீப ஆண் டுகளில் இலங்கை அரசியல் ஸ்திரமின் மையை அனுபவித்து வருகிறது. இத னால் மருத்துவர்கள் உட்பட பலருக்கு நிச்சய மற்ற எதிர்காலம் உருவாகியுள்ளது.

இலங்கையில் மருத்துவர் குடியேற்றத் தின் தாக்கம் குறிப்பிடத்தக்கது மற்றும் தொலைநோக்குடையது. சில முக்கியதாக் கங்கள் பின்வருமாறு:

- **அதிகரித்த மருத்துவச் செலவுகள்:** மருத்துவர்களின் பற்றாக்குறையால் நோயாளிகளுக்கான மருத்துவச் செலவு கள் அதிகரிக்கின்றன. ஏனெனில், கவ னிப்பை வழங்குவதற்குக் குறைவான மருத்துவர்கள் இருப்பதால், நோயாளிகள் மருத்து வரைப் பார்க்க அதிக நேரம் காத்தி ருக்க வேண்டியிருக்கும். மேலும் சிகிச் சைக்காக அதிக கட்டணம் செலுத்த வேண் டியிருக்கும்.
- **கவனிப்பின் தரத்தில் குறைவு:** மருத்துவர்களின் பற்றாக்குறை காரணமாக நடைமுறையில் நோயாளிகளுக்குக் கிடைக்கும் சிகிச்சையின் தரம் குறைவ தற்கு வழிவகுத்துள்ளது. ஏனென்றால், மருத்துவர்கள் அதிக வேலை மற்றும் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். மேலும் அதிகமான மருத்துவர்கள் இருந் தால் அவர்களுக்கு அளிக்கும் அதே அளவி லான கவனிப்பை வழங்க அவர்களுக்கு நேரமோ வளமோ இல்லாமல் இருப்ப தனையும் பார்க்கக்கூடியதாக உள்ளது.
- மருத்துவப் பிழைகள் அதிகரிக்கும் அபாயம்: மருத்துவர்களின் பற்றாக்குறை மருத்துவப் பிழைகளின் அபாயத்தையும் அதிகரித்துள்ளது. குறைவான நேரத்தில் அதிக நோயாளிகளைப் பார்க்க வேண்டிய அழுத்தத்தில் மருத்துவர்கள் இருப்பதால் கடந்த சில மாதங்களாகப் பல மருத்துவத் தவறுகள்ஏற்பட்டு வருவதனை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.
- மருத்துவக் கல்வி சீர்குலைவு: மருத் துவர்கள் பற்றாக்குறையால் மருத்துவக் கல்வியும் சீர்குலைந்துள்ளது. ஏனெனில் மருத்துவ மாணவர்களுக்குக் கற்பிக்கக் குறைவான மருத்துவர்கள் இருப்பதால், கல்வியின் தரம் பாதிக்கப்பட்டுள்ளது.
- மருத்துவம் சார்ந்த மனித வெளி யேற்றம்: இலங்கையில் இருந்து மருத்து வர்களின் இடம்பெயர்வு என்பது ஒரு வகையான மனித வெளியேற்றம் ஆகும். இது ஒரு நாட்டிலிருந்து திறமையான மற் றும் படித்த மருத்துவர்களின் இழப்பைக் குறிக்கிறது. இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் இருந்து உயர்மட்ட மருத்துவர்கள் பெருமளவில் வெளியேறு வது நாட்டின் சுகாதார அமைப்பில் குறிப் பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது திறமையான மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. இது நோயாளிகள் பெறும் சிகிச்சையின் தரத்தை பாதிக்கிறது. இலங்கையைச் சேர்ந்த மருத் துவர்களின் மனித வெளியேற்றம் காரண மாகப் பின்வரும் தொழில்கள் பாதிக்கப்பட லாம்:

- தனியார் சுகாதாரம்: தனியார் மருத்து வமனைகள் மற்றும் கிளினிக்குகள் மருத் துவர்களை பணியமர்த்துவதற்கும் தக்க வைப்பதற்கும் போராடி வருகின்றன. இத னால் நோயாளிகள் நீண்ட நேரம் காத்தி ருக்க வேண்டிய நிலையும், சிகிச்சையின் தரம் குறையும் வாய்ப்பும் உள்ளது.
- பொதுச் சுகாதாரம்: பொதுச் சுகாதார அமைப்பு ஏற்கனவே நெருக்கடி நிலையில் உள்ளது. அதிகமான மருத்துவர்களின் இழப்பு நிலைமையை மேலும் மோசமாக் கும்.
- மருத்துவச் சுற்றுலா: மருத்துவச் சுற்றுலாவிற்கு இலங்கை ஒரு பிரபலமான இடமாகும். இருப்பினும், மருத்துவர்களின் மனித வெளியேற்றம் வெளிநாட்டு நோயா ளிகளின் ஈர்ப்பைக் குறைக்கும். இது நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறை யான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.
- மருந்துத் தொழில்: மருத்துவர்களின்

மனித வெளியேற்றத்தினால் மருந்துத் துறையும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மருந்துகளைப் பரிந்துரைப்பதில் மருத்துவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மேலும் அவர்கள் இல்லாததால் நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சை கிடைக்காமல் போகலாம்.

• மருத்துவ ஆராய்ச்சி: மருத்துவ ஆராய்ச்சியும் மருத்துவர்களின் நிபுணத்துவத்தைப் பொறுத்தது. மருத்துவர்களின் இழப்பு முக்கியமான ஆராய்ச்சியை மேற்கொள்வதைக் கடினமாக்கும். இது மக்களின் ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேற்குறிப்பிட்ட வர்த்தகங்கள் மற்றும் கைத்தொழில்களுக்கு மேலதிகமாக, இலங்கையைச் சேர்ந்த மருத்துவர்களின் மனித வெளியேற்றம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனென்றால், மருத்துவர்கள் மிகவும் திறமையான தொழில் வல்லுநர்கள். அவர்கள் பொருளாதாரத்திற்கு பல வழிகளில் பங்களிக்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வரி செலுத்துகிறார்கள், வேலைகளை உருவாக்குகிறார்கள். மற்றும் வணிகங்களுக்கு வருமானத்தை உருவாக்குகிறார்கள்.

அண்மைக்காலமாக இலங்கையில் இருந்து பல வைத்தியர்கள் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இடம்பெயர்வது நாட்டின் வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வருமானம் என்பவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

• வெளிநாட்டு முதலீடு: வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்காகத் திறமையான பணியாளர்களைக் கொண்ட நாடுகளைத் தேடுகின்றனர். மருத்துவர்கள் இடம்பெயரும்போது, அவர்களது திறமைகள் மற்றும் நிபுணத்துவத்தை அவர்களுடன் எடுத்துச் செல்கிறார்கள், இது இலங்கையை வெளிநாட்டு முதலீட்டிற்கான குறைவான கவர்ச்சிகரமான இடமாக மாற்றுகிறது.

• வெளிநாட்டு வருமானம்: வளர்ந்த நாடுகளில் பணிபுரியும் மருத்துவர்கள் பெரும்பாலும் இலங்கையில் உள்ள தங்கள் குடும்பங்களுக்குப் பணத்தைத் திருப்பி அனுப்புகிறார்கள். இது "பணம் அனுப்புதல்" என்று அழைக்கப்படுகிறது. மற்றும் இது நாட்டிற்கான வெளிநாட்டு வருமானத்தின் குறிப்பிடத்தக்க ஆதாரமாகும். வைத்தியர்கள் இடம்பெயரும் போது, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் பணத்தின் அளவு குறைகிறது.

• வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வருமானம் ஆகியவற்றில் மருத்துவர் இடம்பெயர்வின் தாக்கம் நீண்ட காலத்திற்கு மோசமாக இருக்கும். ஏனெனில் மருத்துவர்களின் இடம்பெயர்வு இலங்கையில் திறமையான மருத்துவ நிபுணர்களுக்குப் பற்றாக்குறையை ஏற்படுத்தும். இந்தப் பற்றாக்குறையானது வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதிலும் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டுவதையும் கடினமாக்கும்.




இலங்கை அரசாங்கம் மருத்துவர் இடம்பெயர்வு பிரச்சினையை உணர்ந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும், இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு முறைமைக்குச் சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவுவதற்கும், நாட்டில் தங்குவதற்கும் மருத்துவர்களை சமாதானப்படுத்துவதற்கும் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ளது.

மருத்துவர் இடம்பெயர்வு பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் செய்யக்கூடிய சில விஷயங்கள்:

• மருத்துவர்களுக்கான பணி நிலைமைகளை மேம்படுத்துதல்: சம்பளத்தை அதிகரிப்பதன் மூலமும், சிறந்த வீட்டு வசதிகளை வழங்குவதன் மூலமும், தொழில்முறை மேம்பாட்டிற்கான அதிக வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் அரசாங்கம் மருத்துவர்களுக்கான பணி நிலைமைகளை மேம்படுத்த முடியும்.

• தொழில் முன்னேற்றத்திற்கான அதிக வாய்ப்புகளை உருவாக்குதல்: சுகாதாரத் துறையில் முதலீடு செய்வதன் மூலம் மருத்துவர்களுக்கான தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை அரசாங்கம் உருவாக்க முடியும். மேலும் ஒழுங்குமுறைச் சுமையைக் குறைப்பதன் மூலமும், நிதி உதவி வழங்குவதன் மூலமும் மருத்துவர்கள் தங்கள் சொந்த நடைமுறைகளைத் தொடங்குவதை அரசாங்கம் எளிதாக்கிக் கொடுக்கமுடியும்.

• மருத்துவ மாணவர்களுக்கு அதிகக் கல்வி உதவித்தொகை மற்றும் நிதி உதவி வழங்குதல்: மருத்துவ மாணவர்கள் மருத்துவப் படிப்பையும் மேலும் மேற்படிப்பினை புலமை அடிப்படையில் படிப்பதற்கு அரசு அதிக உதவித்தொகை மற்றும் நிதி உதவிகளை வழங்க முடியும்.

• அரசியல் ஸ்திரமின்மையை நிவர்த்தி செய்தல்: நாட்டில் நிலவும் அரசியல் ஸ்திரமின்மையை அரசு நிவர்த்தி செய்து மருத்துவர்களுக்கு மிகவும் நிலையான சூழலை உருவாக்க முடியும்.

• இலங்கையை, வாழ்வதற்கும் வேலை செய்வதற்கும் சிறந்த இடமாக மேம்படுத்துதல்: இலங்கையின் அழகிய கடற்கரைகள், நட்புறவுமிக்க மக்கள் மற்றும் செழுமையான கலாச்சாரம் போன்ற நாட்டின் பலத்தை எடுத்துரைப்பதன் மூலம் இலங்கையில் வாழவும் வேலை செய்யவும் ஒரு நல்ல இடமாக மேம்படுத்துவதன் வாயிலாக இந்த இலக்கினை அடையமுடியும்.

மருத்துவர்களின் பணியை ஊக்குவிப்பதன் மூலமும், சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதன் மூலமும் அதிக வாழ்க்கைச் செலவு, வேலைப் பாதுகாப்பு இல்லாமை போன்ற மருத்துவர்களின் கவலைகளைத் தீர்க்கவும் அரசாங்கம் உழைக்க முடியும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கம் மருத்துவர்களுக்கு இலங்கையை மிகவும் கவர்ச்சிகரமான இடமாக மாற்ற முடியும் மற்றும் இடம்பெயர்வு அலைகளைத் தடுக்க முடியும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், இலங்கை அரசாங்கம் மருத்துவர் இடம்பெயர்வு பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கும் எதிர்காலத்திற்கான வலுவான சுகாதார அமைப்பை உருவாக்குவதற்கும் உதவக்கூடியதாக இருக்கும்.

மருத்துவர்களின் மனித வெளியேற்றத்திற்குத் தீர்வு காண இலங்கை அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதில் மருத்துவர்களுக்கான பணிச்சூழலை மேம்படுத்துதல், சம்பளத்தை உயர்த்துதல், தொழில் வளர்ச்சிக்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குதல் ஆகியவை அடங்கும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், நாட்டின் உயர்மட்ட மருத்துவர்களைத் தக்கவைக்கவும், சுகாதார அமைப்பைப் பாதுகாக்கவும் அரசாங்கம் உதவ முடியும்.

இலங்கையில் மருத்துவர் இடம்பெயர்வு ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. இது நாட்டின் சுகாதார அமைப்பு, பொருளாதாரம் மற்றும் சிறு வணிகங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சம்பள அதிகரிப்பு, வேலை நிலைமைகளை மேம்படுத்துதல், வைத்தியர்களின் தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், நாட்டில் மருத்துவர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும், எதிர்காலத்திற்கான வலுவான சுகாதார அமைப்பை உருவாக்கவும் அரசாங்கம் உதவ முடியும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

நேர்கண்டவர் - ஞா.கவினி

**“எந்தவொரு ஆதரவும் இல்லாமல் தனியொரு பெண்ணாக இருந்து பெரிய தொழில்முனைவோராக உருவெடுத்து இன்று பல இளம் தலைமுறையினருக்கு முன்னுதாரணமாய் இருக்கும் பாட்ரிசியாவின் வெற்றிக் கதை குறித்து இன்று காண்போம்.”**




# 50ரூபாவில் தொடங்கி 2 இலட்ச ரூபாய் வரை...

## பாட்ரிசியாவின் வெற்றிக் கதை

பாட்ரிசியா தாமஸ். இவரது பெற்றோர் இருவருமே அரசு வேலை பார்ப்பவர்கள். இவரது இளமைக் காலம் மகிழ்ச்சியான ஒன்றாகவே இருந்தது. ஆனால் திருமணம் ஆன சிறிது காலத்திலேயே பாட்ரிசியாவின் கணவர் போதைப் பழக் கத்தில் மூழ்கத் தொடங்கினார். இதனால் பாட்ரிசியாவின் கனவுகள் அனைத்தும் சின்னா பின்னமாகின. குடும்பத்தை நடத் தப் பணம் இல்லாமல் தவித்தார். வேறு ஆதரவும் இல்லை. அப்போது அவர் ஒரு முடிவை எடுக்க வேண்டியதாக இருந்தது. ஒன்று மரணம், மற்றொன்று விதியை எதிர்த்துப் போராடுவது. வயிற்றில் குழந்தை இருந்த சூழலில் தனித்துப் போராட முடிவு செய்தார். தன் கணவரை விட்டுப் பிரிந்து வெளியேறினார். இரண்டு குழந்தைகளுடன் கதியற்று நின்றார் பாட்ரிசியா. ஊறுகாய் வியாபாரம்!

பாட்ரிசியாவுக்கு எந்த வேலையும் தெரியாது. படிப்போ சான்றிதழ்களோ இல்லை. யாரும் தனக்கு வேலை தரமாட்டார்கள் என்று அவருக்குத் தெரியும். பெண் என்றாலே அவள் அடுப்படியில் வெந்து வாட வேண்டும் என்று கூறும் காலம் அது. அதையே தனக்குச் சாதகமாக மாற்றிக் காட்டினார் பாட்ரிசியா. சமையல் கலையில் ஓரளவுக்குக் கைதேர்ந்தவராக இருந்த அவர், தனது வீட்டிலேயே ஊறுகாய், ஜாம் போன்றவற்றைத் தயாரித்துத் தனது தாய் வேலைபார்க்கும் அலுவலகத்தில் விற்பனை செய்யத் தொடங்கினார். இதற்கு நல்ல வரவேற்பு இருந்தது. சமையல் கலைதான் தனக்கும் தனது இரண்டு குழந்தைகளுக்கும் சோறுபோடும் என்று



அப்போது அவர் முடிவுசெய்தார். தள்ளு வண்டிக் கடை!

எத்தனை நாட்களுக்குத்தான் வீட்டிலேயே வியாபாரம் செய்வது என்று நினைத்து சிறிதாக ஒரு தள்ளுவண்டிக் கடை ஆரம்பித்தார். அதில் உணவு, தேனீர் போன்றவற்றை விற்பனை செய்யத் தொடங்கினார். முதல் நாளே அவருக்கு சரியாக வியாபாரம் ஆகவில்லை. அன்று அவருக்கு வெறும் 5ரூபா மட்டுமே கிடைத்தது. மனம் தளராத பாட்ரிசியா தொடர்ந்து விற்பனையில் ஈடுபட்டார். அவரது கை வண்ணம் மக்களை ஈர்த்தது. வியாபாரம் சூடுபிடித்தது. ஆயிரங்களில் வருமானம் கிடைத்தது.

தனியொரு பெண்ணாகத் தொழில் தொடங்கிய பாட்ரிசியாவிடம் இப்போது பலர் பணிபுரிகின்றனர். 50 ரூபாவுடன் தொடங்கிய இவரது உணவுத் தொழிலில் இப்போது ஒரு நாளைக்கு 2 இலட்சத்துக்கு மேல் வருமானம் வருகிறது. இவரது விடா முயற்சியால் ஏற்பட்ட வளர்ச்சியைப் பாராட்டி 2010ஆம் ஆண்டில் சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருதைப் பெற்றார். பெண்ணாக இருந்தாலும், யாருடைய ஆதரவும் இல்லாமல் இருந்தாலும் விடா முயற்சியும் மன உறுதியும் இருந்தால் வெற்றிபெறலாம் என்பதற்குப் பாட்ரிசியாவின் வெற்றிக் கதை ஓர் உதாரணமாகும்.

# வணிக உலகில் பெயர் மாற்றம் ஏன் அவசியம்?




செ.சரத்

பொதுவாகவே பெயர் மாற்றம் என்பது காலத்தின் தேவை கருதியோ அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ இடம் பெறும். வணிக உலகில் பெயர் மாற்றம் செய்யும் போக்கு எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

நிறுவனங்களில் பெயர் மாற்றம் என்பது இரு வகைகளில் நடைபெறும். ஒன்று நிறுவனத்தின் பெயரை முழுதாக மாற்றுவது அல்லது நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருளின் பெயரை (brand) மட்டும் மாற்றுவது. பெரும்பாலும் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருளின் பெயரையே (rebranding) மாற்றும் சூழல் நிலவி வருகிறது.

அமெரிக்காவின் ஆய்வறிக்கை ஒன்று நிறுவனங்களில் 52 சதவீதம் அளவிற்குப் பெயர் மாற்றம் என்பது ஒரு நிறுவனத்தை மற்றொரு நிறுவனத்துடன் இணைப்பதாலும் அல்லது வேறொரு நிறுவனத்தால் வாங்கப்படுவதாலும் நடைபெறுகிறது என்றும் மீதமுள்ள 48 சதவீதம் என்பது நிறுவனங்கள் தங்களை மேலும் நன்கு புதுமையான வழியில் அடையாளப்படுத்திக் கொள்ள பெயர் மாற்றம் செய்வதாகவும் கூறியுள்ளது.

ஒரு நிறுவனத்தின் பெயரை மாற்ற வேண்டியசூழல் ஏற்படுகிறது என்றால் முதலில் வாடிக்கையாளர்களிடத்தில் அதற்கான தகுந்த காரணத்த் தெரிவித்து விட வேண்டும் என்கிறார் ஹார்வர்ட் மேலாண்மைக் கல்லூரியின் பேராசிரியர் ஜில் அவேரி. நாம் செய்த பெயர் மாற்றம் என்பது முறையில்லாத அல்லது தேவையில்லாத ஒன்றாக இருந்தால் நிச்சயம் வாடிக்கையாளர்களிடத்தில் அதனால் எதிர்விளைவுகள் ஏற்படும் என்கிறார்.

பெயர் மாற்றம் செய்துவிட்டால் நிச்சயம் ஏதோ புதுமையை வழங்க இருக்கிறார்கள் என்கிற எண்ணம் அனைத்து வாடிக்கையாளர்களையும் தொற்றிக்கொள்ளும். அந்த எண்ணத்திற்கு எந்த வகையிலும் குறை வைக்காமல் காப்பாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு நிறுவனங்களுக்கு உண்டு.

சமீப ஆண்டுகளில் பல்வேறு முக்கிய நிறுவனங்கள் தங்கள்பெயரை மாற்றியுள்ளன. பேஸ்புக் நிறுவனம் தனது பெயரை மெட்டா என்று மாற்றியது. அதேபோல் ருவிட்டர் நிறுவனத்தை வாங்கிய எலான் மஸ்க் தற்போதுஅதன் பெயரை 'எக்ஸ்' என்று மாற்றியுள்ளார்.

கே.எப்.சி நிறுவனத்தின் முந்தைய முழுப்பெயர் கேன்டுகி பிரைடு சிக்கன் என்பதாகும். எனினும் இங்கு பிரைடு (அதாவது வறுவல்) என்பது வாடிக்கையாளர்களிடையே ஆரோக்கியமான ஒன்றாக கருதப்படவில்லை என்பதை அறிந்ததும் சுருக்கமாக கே.எப்.சி.என மாற்றி விட்டனர்.

புதியதொரு சூழ்நிலைக்கு அடியெடுத்து வைக்கும் பொருட்டு 2019-ஆம் ஆண்டு டன்கின் டோனட்ஸ் (Dunkin Donuts) என்கிற நிறுவனம் தனதுபெயரை டன்கின் எனச் சுருக்கிக் கொண்டது. அதாவது ஆரம்பத்தில் டோனட்ஸ் என்கிற பெயரில் பேக்கரி வகையிலான உணவுகளை மட்டும் விற்று வந்தது.

பின்னர் குளிர்பானம் பிரிவில் நுழைந்தவுடன் அதில் வருமானம் பெருக, அவர்களின் அடையாளத்தை மாற்றிக்கொள்ளும் வகையில் டன்கின் என்று சுருக்கிக் கொண்டனர். மேலும் அமெரிக்காவே டன்கின் மூலம் இயங்குகிறது என்னும் அடைமொழிக்கு வலுச்சேர்க்கும் வகையில் இருப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்து இருந்தது.

ஒரு புறம் பெயர் மாற்றம் என்பது நிறுவனங்களுக்குப் புத்துணர்ச்சியை கொடுத்தாலும் மற்றொரு புறம் செலவினங்களையும் அதிகரித்து விடுகிறது. பெயர் மாற்றத்துக்கான யோசனையில் தொடங்கி அதற்கான ஆலோசனைகள், இலச்சினை வடிவமைப்பு என ரூ 40,000 வரை செலவு ஆகும் என்கிறது போர்ப்ஸ் இதழ்.

வரலாற்றில் பெயர் மாற்றம் என்பது பல்வேறு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவசியம் என்றால் மட்டுமே பெயர் மாற்றம் செய்ய வேண்டும். தேவையின்றி பெயர் மாற்றம் செய்ய முற்பட்டால் அவை சிக்கல்களை ஏற்படுத்தும். குறிப்பாக வாடிக்கையாளர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாக வாய்ப்பு உண்டு என்கின்றனர்.

**"வரலாற்றில் பெயர் மாற்றம் என்பது பல்வேறு தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அவசியம் என்றால் மட்டுமே பெயர் மாற்றம் செய்ய வேண்டும். தேவையின்றிப் பெயர் மாற்றம் செய்ய முற்பட்டால் அவை சிக்கல்களை ஏற்படுத்தும். குறிப்பாக வாடிக்கையாளர்கள் பெரும் குழப்பத்திற்கு உள்ளாக வாய்ப்பு உண்டு என்கின்றனர்."**

# கலாச்சாரம் தரும் தொல்லைக்காட்சிகள்



## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

வேலியில் படரும் கொடிகளிலிருந்து அழகிய மலர்க் கொத்துகளைப் பறித்துக் காதுகளில் தொங்க விடுவோம். பூக்களை மாலையாகத் தொடுத்துக் கழுத்திலும் கைகளிலும்சகுந்தலை போல அணிவோம். கந்தலாகிப் போன அம்மாவின் சேலை களைச் சுருக்கு வைத்துக் கட்டிக் கொள் வோம். தேயிலைச் சாக்குகளின் உட்புறம் வரும் ஈயக்கடுதாசிகளில் மேலும் அழகான ஒட்டி யாணம் கிரீடம் என்பனவும் செய்து கட்டிக்கொள்வோம்.

இப்போது சினிமாப் படங்களில் வரும் இராசகுமாரிகளாக எம்மைக் கற்பனை பண்ணிக் கொள்வோம் அம்மா சேனைப் பிலவுக்குள்ளிருந்து வீட்டுக்கு வரும் நேரம் நாங்கள் அமசடக்காக எதுவுமே தெரியா மல் அமர்ந்து வேலைகளில் ஈடுபடுவோம். அம்மா எதையாவது கண்டுவிட்டால் அது எங்கள் குலநாசம் என்ற வகையில் ஏசித் தீர்த்து விடுவார்.

“நாடகம் நடிக்கிறியிளே நாடகம்” எடி அவளவை காசுக்கு ஆடுறாளவை கண்டவனையுங் கட்டிபிடிக்கிறாளவை நீங்கள் குலத்தில பிறந்தேன் குரங்காட்டம் ஆடுறியள். படத்தைப்பாத்தா நாடகத்தை பாத்தா அதை ரசிக்கிறதோட விடுங்க பிறகு நீங்களும் ஆட வெளிக்கிடாதையுங்க” எண்ட கருத்துப்பட அம்மா அரைமணி நேரத்துக்கு மேலேயே உரையாற்றும் (ஏசும்) வல்லமை படைத்தவர்.

அந்தப் பேச்சாற்றல்தான் பின்னாளில் என்னையும் தொற்றிக் கொண்டிருக் குமோ? ச்சா ஒரு சந்தேகந்தான். சரி நாங் கள் பேச வந்த விசயத்துக்கு வருவோம். மனிதர்கள் மானத்தை மறைக்கத்தான் உடுத்திற வழக்கம் வந்தது. பின்னர் அந்த உடுதுணிகளையே விதம்விதமாக தைத்து அணியும் பழக்கமும் வந்தது.

முன்னர் ஆடைகள் உடலை மறைக்க இன்றைய ஆடைகள் உடலைக்காட்ட என்றாகிவிட்டது. மரியாதையான உடை சேலை என்பது போய் கவர்ச்சிகரமான ஆடை என்றால் அது சேலைதான் என்றாகி விட்டது. தமிழர்களுடைய விழாக்கள் சடங் குகள், விசேடங்கள் அனைத்திலும் புத் தாடை எடுப்பது முக்கியமான நிகழ்ச்சி. நகைகளைப் பொறுத்தவரை பாரம்பரிய மாகக் குடும்ப நகைகளுடன் காலங்கால மாகச் சிறுகச் சிறுக சேமித்து வாங்கும் நகைகளும் இருக்கும். எல்லா விழாக் களுக்காகவும் நகை வாங்கும் வசதி இருப் பதில்லை திருமணம் என்றால் மட்டும் தாலி வாங்குவார்கள். எல்லாம் மாறிவிட் டது.

தொலைக்காட்சித் தொடர்கள் அனைத் தும் விளம்பரம் கருதியே நடக்கின்றன. அவை அனைத்திலுமே திருமணம் வரு கிறது. அன்றாடம் கஷ்டப்படும் ஒரு குடும் பத்தில் கூட திருமணத்திற்குப் புடவை எடுக்க குடும்பம் முழுவதுமே போகிறது. புடைவைக் கடைகளை விதவிதமான கோலங்களில் படம் எடுக்கிறார்கள் பட்டுப் புடவை களின் விலையோ இலட்ச ரூபாக்க ளைக் கடந்து விடுகிறது. அப்படியே அந்தக் கும் பல் நகைக்கடைக்குள் நுழைகிறது. அங்கும் பல இலட்சங்கள் கைமாறுகின் றன. சேலையை எடுத்து அதை அணிந்து பார்த்து பிறகு கழற்றி வைத்து வேறு புடவை வாங்கி அடஅடஅட! என்ன அமர்க் களம். அது போகட்டும்

அதே வகையில் நம்மூர் இளவட்டங் களுக்கும் ஆடைகள் தேவைப்படுகின் றன. விதம் விதமான ஆடைகள் என்பது போய் ஒரே மாதிரி நிறத்தில் அனைவ ரும் புடவைகட்டவும் ஒரே மாதிரியான சேர்ட்டுகளை ஆண்கள் அணிவதும் இன்றைய நாகரீகமாகியுள்ளது. விழாவிற் கான அழைப்பிதழில் அந்த நிகழ்ச்சியின் கலர் என்ன என்பதையும் அடித்து விடுகி றார்கள். ஆச்சா திருமணத்துக்கோ அல் லது நிகழ்ச்சிக்கோ போக வேண்டிய வரும் அதே நிறத்தில் ஆடை அணிய வேண் டியுள்ளது. எனவே அன்பளிப்புக் கான பணத்துடன் இந்த ஆடைச்செலவும் சேர்ந் துள்ளது.

‘மெகந்தி பங்ன்’ சங்கீத் பங்ன் இவை இரண்டும் வடநாட்டிலிருந்து தமிழ்நாட் டுக்கு வந்து இப்போது கள்ளவேலி பாய்ந்து நம்மூருக்குள் நுளைந்துள்ளது. நாணித் தலைகுனிந்து பையப்பைய நடப்பது மண வறை செல்லும் பெண்களுடைய வழக் கம். வேலையில் சுறுசுறுப்பில்லாதவரை

நாம் இப்பவும் "என்ன ஆடி அசைஞ்சு வாறாய் மணவறைக்கே போறாய்" என கேலி செய்வது வழக்கம். இன்று சினிமா வில் வரும் கதாநாயகிபோல துள்ளிக் குதித்து நடனமாடியவாறே மணப்பெண் மணவறைக்கு வரஅவளை எதிர்கொண்டு மணமகனும் கதாநாயகனுக்கு நிகராக ஆடிச்சென்று (ஓடிச்சென்று)மணமகளை அழைத்துக் கொண்டு ஆடியபடியே மேடை யேறுகிறார்.

இப்போது என் பூட்டி சொன்ன கதை நினைவுக்கு வருகிறது. திரைப்படத்தில் காதல் வந்தால் ஒரு பாடல். சோகம் வந்தால் ஒருபாடல் விருந்தினரை நண்பர்களைக் கண்டால் ஒரு பாடல் என்று வருகிறதே. உண்மையில் அப்படித்தான் மனிதர்கள் நடந்து கொள்ளுகினமோ? ஒருநாலு நாளைக்கு அப்பிடி நடக்க வெளிக்கிட்டா என்ன நடக்கும்? ஊர் முழுக்க ஒரே இரைச் சலா இருக்கும் ஆற்ற பாட்ட ஆர் கேக்கி றது? நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிப்போம். செத்தவீட்டில் ஒப்பாரி யாக நின்ற பாடல் ஒழிந்து போய்விட்டது. கலியாண வீடுகளில் பாட்டுக் காது வெடிக் கிறது.

ஒருநாளைக்கு இவர்களை நடிகர்க ளாக்கிய அந்த கலாச்சாரம் தொலைக் காட்சிகளிலும், சினிமாப்படங்களிலும் கூட இன்னும் முழுமையாக வரவில்லை. ஊருக்குள் பரவி வருகிறது. எமது கலியா ணங்களை நாம் சிக்கனமாக மாலை மாற்றிச் சோறிட்டு முடித்த காலம் உண்டு எனது வீட்டில் எனக்கும் என் சகோதரிக ளுக்கும் அப்படித்தான் நடந்தது. நாங்க ளும் முதுமை வரை கூடி வாழ்ந்தோம்.

இன்று திருமண விழாக்களின் முன்னேற்பாடாக. நிச்சயதார்த்தம் என்று ஒன்று வருகிறது. அதுகூட எமது கலாச்சா ரத்தை ஊடறுத்து நுழைந்ததுதான். எங் கள் வீடுகளில் கொழுக்கட்டைப் பரிமாற் றம் என்பதாக அது இருந்தது. அதுவும் எல்லோரும் செய்வதில்லை. கலியாண வீடுகளுக்காக இன்று நடக்கும் செலவுக ளில் மணமகளைப் பெற்றவர்கள் செய்ய விருக்கும் செலவில் வாகனச் செலவென் பது பெரிதாக அமைகிறது.

எங்காவது தொலைதூரக் கோவில், சம்பந்தக்கலப்பு என்பவை எல்லாம். உற வினர், நண்பர்கள் என பெரிய பட்டாளத்தை ஏற்றிப்பறிக்கும் செலவு புதிதாக முளைத் துள்ளது என நான் சொல்ல, புளியம் பொக் கணையில் வசிக்கும் எண்பது வயதுக் கும் மூத்த பெரியவர் ஒருவர் சொன்னார். தனது கலியாணத்துக்கு மாப்பிளை அழைப்புக்காக இருபத்துநாலு கூடாரமிட்ட மாட்டு வண்டில்களில் ஆட்களும் சீர்வரி சைகளும் வந்தன என்று. எனக்கொரு நாட்டார் பாடலில் வந்த கீழ்க்காணும் அடிகள் நினைவுக்கு வருவதைத் தடுக்க முடியவில்லை.

"அஞ்சு வண்டிச் சனமும் அதுக்கேத்த செலவும் பத்து வண்டி சீரும் பகட்டான தோரணயும் கொண்டுவந்த தாய்மாமன்" இது ஒரு நீளமான வரிசைப்பாடல். வரிக்கு வரி அழகானது. திருமணம் மட்டுமல்ல இன்றைய எமது மக்களின் வருடாவருடம் வரும் பிறந்த நாட்களே பெரும் செலவை எதிர்பாத்து நிற்கின்றன. வாழ்க்கைச் செல வைச் சமாளிக்க முடியாமல் நாம் இருக் கிறோம் என்பதெல்லாம் சும்மா. இப்படி அயலில் நடக்கும் பிறந்த நாட்களில் கூடச் செறிவாக மக்கள் கூடுகிறார்கள்.

எமது மக்கள் தாம் வலிதாகச் சென்று கலந்து கொள்ளும் குடும்பத்தின் நிலையை கருத்தில் கொள்வதில்லை. ஒரு குடும்பத் தில் இறுதி யுத்தத்தின்போது கணவனும் பதினைந்து வயது மகனும் காணாமல் போய்விட்டார்கள். இருந்த இரண்டு மகன் களையும் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு அந்தப் பெண் கல்விகற்க வைத் தாள். ஒரு மகன் சிறந்த பெறு பேறுகளுடன் சித்தியடைந்தான். அந்தப்பெண் மகனுக்கு நல்ல உணவைச் சமைத்துக் கொடுக்க விரும்பி ஒரு கோழி வாங்கிச் சமைத்தாள். மாலை மூன்று மணியளவில் திரும்ப வந்து இன்னுமொரு கோழி கடனாக தர முடியுமா? என கேட்டாள். காரணம் வீட்டில் சமைத்த மத்தியான உணவு அவர்களுக்கே மிஞ்சவில்லை அழைக்காமலே வந்த பையனின் நண்பர்கள் சாப்பிட்டுவிட்டே செல்வோம் என அடாவடியாக நின்றதால் இந்தநிலை. 'என்ன செய்யிறது. பிறண் டுப் பொடியள வச்சுக் கொண்டு கதைக்கேல யில்லை ஆர் எனக்கு உழைக்கிறது ' என கவலைப்பட்டாள் அந்தப்பெண்.

காலம் சினிமாக் கதாநாயகர்களைப் போல சாதாரண மக்களை வாழச் சொல் கிறதா? இல்லையே எங்களது பொருளா தாரம் தொலைக்காட்சி, சினிமா போன்ற விளம்பரச் சாதனங்களால் கொள்ளைய டிக்கப்படுகின்றது. கூடியிருந்து விருந்தா டிக்களிப்பவர்கள் நாளைக்கு நாம் பட்டினி கிடக்கும்போது வந்து உதவப்போவ தில்லை. இவ்வளவுதான் என பிள்ளை களை உணர வைக்கத் தாய் என்ன செய்வாள்? எம்மில் அநேகர் இப்போது பிள்ளைகளால் வழிநடத்தப்படுகிறோம். அவர்களை வழிநடத்தும் திறன் அற்றி ருக்கிறோம்.

திருமணத்துக்கான மாப்பிள்ளை பார்த்து திருமணத்தைப் பதிவு செய்ய நாள் குறித்து விட்டு, அதன்பின் பெற்றோரி டம், அப்பா ஒரு பயினைஞ்சு இருவது பேர் வருவினம். நீங்களும் றிசிஸ்டர் ஒவீசுக்கு நேரத்தோட வந்திருங்கோ என்ற மகளை நான் கண்டிருக்கிறேன். அந்தத் தந்தை அந்தத் திருமணத்துக்குப் போகவேயில்லை. இதுவும் தொலைக்காட்சி சீரியல் என்றா நினைக்கிறீர்கள். இல்லை நிஜம். என் எதிர் வீட்டில் நடந்தது. காலம் மாறுகிறதா? மாற்றுகிறோமா?

"திருமணத்துக்கான மாப்பிள்ளை பார்த்துத் திருமணத்தை பதிவு செய்ய நாள் குறித்துவிட்டு, அதன்பின் பெற்றோரிடம், "அப்பா ஒரு பயினைஞ்சு இருவது பேர் வருவினம். நீங்களும் றிசிஸ்டர் ஒவீசுக்கு நேரத்தோட வந்திருங்கோ" என்ற மகளை நான் கண்டிருக்கிறேன். அந்த தந்தை அந்தத் திரு மணத்துக்குப் போகவேயில்லை"

# ஏலக்காய் பயிர்ச்செய்கை முறை



ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



ஏலக்காய் இதமான காலநிலையில் வளரக்கூடிய பயிராகும்.

வெப்பப் பிரதேசங்களில் நடுகை செய்வது மிகுந்த சவாலாக இருக்கும்.

ரசாயன முறையில் உற்பத்தி செய்யப்படும் ஏலக்காய்க்கு இருக்கும் சந்தை வாய்ப்பினை விட இயற்கை முறையில் உற்பத்தி செய்யப் படும் ஏலக்காய்க்கு அதிக சந்தை வாய்ப்பு உள்ளது.

உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளிலும் அதிக கேள்வி உள்ளது.

ஏலக்காய் பயிர்ச்செய்கை ஆனது களிமண், மணல் தவிர்ந்த ஏனைய மண்ணில் வளரக்கூடிய பயிராகும்

மண்ணின் கார,அமிலத்தன்மை 6.6 தொடக்கம் 4.2 வரை இருக்க வேண்டும்.

ஏலக்காய் நடுகை செய்யும்போது போதுமான மழைவீழ்ச்சி கிடைக்கக் கூடிய இடங்களில் 9 × 9 என்ற இடைவெளியில் நடவேண்டும்.



குறைந்த மழை வீழ்ச்சி கிடைக்கக் கூடிய இடங்களில் 7 × 7 என்ற இடைவெளியில் நடவேண்டும்.

நடுவதற்கு 2 × 2 × 2 அடி என்ற அளவில் குழி தோண்டி அதற்குள் நன்கு மக்கிய உரம் இட்டு அதற்கு மேல் சிறிது



மண்ணைத் தூவி இரண்டு வாரங்கள் வைத்திருந்து பின்பு செடிகளை அக்குழிக்குள் நடவேண்டும்.

நடுகைக்கு ஆரோக்கியமான சிறந்த செடிகளைத் தேர்வு செய்ய வேண்டும். அத் தோடு அரசு அங்கீகாரம் உள்ள பண்ணைளிலிருந்து நாட்டுரக நாற்றுக்களை பெற்றுக்கொண்டு ஜுலை - ஆகஸ்ட் மாதங்களில் நடுகை செய்யத் தொடங்கலாம்.

நடவு செய்த இரண்டு வருடங்கள் வரை கவனமாகப் பராமரிக்க வேண்டும்.

குறிப்பாக மார்ச், ஏப்ரல், மே, ஜுன் மாதங்களில் செடிகளுக்கு வெயில் படாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

கன்றுகளை நாட்டிய நாட்களிலிருந்து மாதத்தில் ஒரு தடவையேனும் பயிர் வளர்ப்பு ஊக்கியான ஜீவாமிர்தம் அல்லது பஞ்சகாவியா போன்ற இயற்கைக் கரைசலை செடிகளுக்குத் தெளித்து வரவேண்டும்.

அதோடு செடிகளுக்கு நோய்த் தாக்கம் இருக்கும் அறிகுறிகள் தென்பட்டால் இயற்கைக் கரைசலான கற்பூரக் கரைசல் அல்லது அக்னி அஸ்திரா அல்லது மூலிகை கரைசல் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

ஒவ்வொரு ஆண்டும் மே, ஜுன் மாதங்களில் ஒவ்வொரு செடிக்கும் இரண்டு கிலோ மக்கிய குப்பை, எருவையும் கலந்து மண் அணைக்க வேண்டும்.

மூன்றாவது வருடத்தில் இருந்து காய்களைப் பறிக்க ஆரம்பிக்கலாம் அதைத் தொடர்ந்து 45 நாட்களுக்கு ஒரு முறை ஏலக்காய்களைப் பறிக்க முடியும்.

காய்க்க ஆரம்பித்த முதல் வருடத்தில் ஓர் ஏக்கருக்குக் குறைந்த பட்சம் 750 கிலோ வரை கிடைக்கும்.

இதைக் காய வைத்து எடுத்தால் 150 கிலோ வரை இருக்கும்.

பின்பு ஒவ்வொரு வருடமும் உற்பத்தி அதிகரித்துக் கொண்டு செல்லும். ஐந்தாவது வருடத்தில் காய்ந்த ஏலக்காய் 400 முதல் 500 கிலோ வரை உற்பத்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

அதிகபட்சமாக ஏக்கருக்கு 1,000 கிலோ வரை காயவைத்த ஏலக்காய் உற்பத்தி செய்த விவசாயிகளும் இருக்கின்றார்கள்.

அத்தோடு இதற்கு ஊடுபயிராக மிளகும் நடுகை செய்யலாம்.







# துவரை பயிர்ச்செய்கை முறை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



துவரையின் தாயகம் ஆசியாவாகும்.

துவரை இப்போது உலகின் பல பாகங்களிலும் பயிரிடப்படுகிறது.

துவரையிலும்பத்துக்கு மேற்பட்ட இரகங்கள் உள்ளன.

நாட்டு இரகம் போதுமான விளைச்சலை கொடுப்பதோடு நோய் தாக்கும் வீதமும் குறைவாக உள்ளது.

துவரை பொதுவாகக் கோடைகாலங்களில்பயிரிடப்படுகின்றது. இருப்பினும் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பயிரிட்டால் அதிக விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும்.



செம்மண்ணில் நன்கு வளரும்தன்மை கொண்டது. துவரை ஓர் ஏக்கரில் நடவு செய்வதற்கு. 5 டன் மக்கிய எருவை ஆங்காங்கே அடி உரமாக இட்டு உழவு செய்ய வேண்டும்.

நடும்பொழுது15 செ.மீநீள,அகல, ஆழத்தில் குழி தோண்டி 5 × 3 அடி இடைவெளியில் நடவேண்டும். ஓர் ஏக்கருக்கு 2,500 செடிகள் வீதம் தேவைப்படும்.

நடும் பொழுது ஒவ்வொரு குழியிலும் ஒரு கிலோ மக்கிய உரம் இட்டு மூன்று விதைகள் வீதம் நடவேண்டும்.

நட்டு இரு வாரத்தில் ஆரோக்கியமான செடி ஒன்றை விட்டு மற்ற செடியைப் பிடுங்கி எறிந்து விட வேண்டும். ஓர் ஏக்கருக்கு 4 கிலோ விதைகள் தேவைப்படும். நடவு செய்தவுடன் நீர்ப்பாசனம் செய்ய வேண் டும்.

பின் மண்ணின்ஈரத்திற்கேற்ப 3 நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும்.

நடவு செய்த 30ஆம் நாள் ஜீவாமிர்தக் கரைசல் தெளிக்க வேண்டும்.

பூக்கும் தருணத்தில் தேமோர் கரைசல் அல்லது பஞ்சகாவ்யா கரைசலை 15 நாள்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது கட்டுப்படுத்தப்பட்டு அதிக எண்ணிக்கை காய்கள் உருவாகும்.

துவரை நடவு செய்து 20 ஆவது நாளில் செடியின் நுனிப்பகுதியைகிள்ளிவிட வேண்டும்.

இவ்வாறு செய்வதனால்செடிகளில் பக்கக் கிளைகள் அதிகமாகும். நடவு செய்து 30 - 40ஆவது நாளில் செடிகள் சாய்ந்து விடாமல் மண் அணைத்துக் களைகளை அகற்றிவிடவேண்டும்.

பயிர்களில்பூச்சிகள் ஏதும் தென்பட்டால் இயற்கை கரைசலானகற்பூரக் கரைசல் அல்லது அக்னி அஸ்திரா அல்லது மூலிகைக் கரைசல் போன்றவற்றை பயன்படுத்தலாம். காய் 80% முதிர்ந்தவுடன் முழுப் பயிரையும் அடியோடு அறுவடை செய்யாது. 2 – 3 நாட்களுக்குக் குவியலாக வைத்திருந்து பின்பு உலர்த்த வேண்டும்.

சாதாரணமாக ஓர் ஏக்கருக்கு 750 கிலோ விளைச்சல் கிடைக்கும்.

# முகாமையாளர் எவ்வாறு நிர்வகிக்க வேண்டும்?



பணியிடத்தில் பலரையும் நிர்வகிக்கும் முக்கியமான பதவி மேனேஜர். அதாவது முகாமையாளர். சிறப்பாகப் பணிபுரியும் நபர்களுக்குப் பதவி உயர்வு தரப்படுகிறது. அப்படிப் பதவி உயர்வு பெற்று முகாமையாளராகப் பொறுப்பேற்கும் எல்லோரும் சிறந்த முகாமையாளராகத் திகழ முடியுமா..? சிறந்த முகாமையாளராக வளர்த்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்..?

இது குறித்து விரிவாகச் சொல்லித் தருகிறது 'வாட் மேக்ஸ் கிரேட் மேனே ஜர்ஸ் கிரேட்' (What Makes Great Managers Great) என்ற புத்தகம். கலிஃபோர்னியாவைச் சேர்ந்த கர்ட்டிஸ் மர்பி எழுதிய புத்தகம் இது. கேம் ஸ்டுடியோ ஒன்றில் பொறியியல் பிரிவில் துணைத் தலைவராக இருக்கும் இவர் ஒரு பேராசிரியரும் ஆவார்.

### முகாமையாளராகமுன்

"நீங்கள் முதன்முதலாக முகாமையாளரான உடனேயே நீங்கள் உங்களுக்குக் கீழே பணிபுரியும் நபர்களை முழுமையாக நிர்வகிக்கத் தயாராக இருந்தீர்களா? முகாமையாளராகுமுன் உங்களுக்கு அதற்கான பயிற்சி அளிக்கப்பட்டதா?

என் அனுபவத்தை வைத்துச் சொல்கிறேன், அப்படி எதுவும் உங்களுக்குத் தரப்பட்டிருக்க வாய்ப்பே இல்லை. பெரும்பாலான முகாமையாளர்கள் அந்தப் பதவியை அடைந்து, சராசரியாக ஐந்து ஆண்டுக் காலத்துக்குப் பிறகுதான் அந்தப் பதவிக்கான பயிற்சியைப் பெறுகின்றனர். அந்தச் சூழ்நிலையில் தரப்படும் பயிற்சியும் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு ஒன்றும் இருக்காது.

### 5 கேள்விகள்

"முகாமையாளர் வேலை என்பது ஒரு சாதாரணமான வேலை இல்லை. ஏனென்றால், முகாமையாளரின் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக இருக்கும். ஒரு நாள் சூப்பராக, ஒரு நாள் சுமாராக, மற்றுமொரு நாள் படுமோசமாக என்று செல்லும். பலருடைய வாழ்க்கையில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கும் பதவி அது. இதனாலேயே ஒரு சாதாரண முகாமையாளராக இருந்துவிட்டுப் போவது என்பது பெரிய அளவிலான தீங்கை உங்களுக்கும் உங்களுடன் பணிபுரிபவர்களுக்கும் உருவாக்கிவிடும். இதில், குறைந்தபட்சச் செயற்பாடு என்பது போதவே போதாது. நிச்சயமாக ஒரு முகாமையாளர் சிறந்த செயல்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

சில அடிப்படையான அணுகுமுறைகள் தான் ஒருவரைச் சிறந்த முகாமையாளராக உருவாக்குகின்றன. அத்தகைய அணுகுமுறைகளை அடையாளம் காண நீங்கள் ஐந்து கேள்விகளைக் கேட்க வேண்டும்" என்று சொல்லும் ஆசிரியர், பின்வரும் ஐந்து கேள்விகளை நம்முன்னே வைக்கிறார்.

1. உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களுக்கு அவர்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப் படுகிறது என்பது தெளிவாகத் தெரியுமா?
2. அவர்கள் குறித்த செயல்பாடு குறித்த கருத்துகளை அவர்களுக்கு நீங்கள் எப்படித் தெரிவிக்கிறீர்கள்?
3. உங்களுக்குக் கீழே பணிபுரியும் நபர்கள் உங்களிடம் சொல்லாத விஷயங்கள் என்னென்ன?
4. உங்களுக்குக் கீழே பணிபுரியும் நபர்கள் உளமார அதிக ஈடுபாட்டுடன் பணிபுரிகிறார்களா?
5. உங்களுக்குக் கீழே பணிபுரிகிற குறைந்த செயல்திறன் கொண்ட நபர்களை நீங்கள் எப்படிக் கையாளுகிறீர்கள்?

இந்த ஐந்து கேள்விகளே மிக மிக முக்கியமானவை. இந்தக் கேள்விகளுக்கான சரியான பதிலைச் சொல்வதற்கான வழிமுறைகளையும் நுட்பங்களையும் பல்வேறு உதாரணங்களுடன் விளக்குகிறது இந்தப் புத்தகம்.

"சில அடிப்படை விஷயங்களை நாம் முதலில் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் ஏற்கெனவே லீடர் (முகாமையாளர்) ஆகி 10 ஆண்டு கடந்துவிட்டது. ஆனாலும், இன்னமும் நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியவை நிறையவே இருக்கின்றன. ஏனென்றால், உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை கொண்டவர்களாகவும், சிக்கலான செயல்பாடு மற்றும் மன அமைப்பைக் கொண்டவர்களாகவும், தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கும் குணாதிசயத்தைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர்.

இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன..? நீங்களும் மாறிக்கொண்டே அதாவது உங்கள் திறனை வளர்த்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதைத்தானே" என்று கேட்கும் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர், அதற்கான வழிகளையும் சொல்கிறார்.

### சரியான கேள்விகளைக் கேளுங்கள்

"தலைசிறந்த முகாமையாளர்களை உருவாக்கும் குணாதிசயம் எது? தலைசிறந்த முகாமையாளர்கள் மிகச் சரியான கேள்விகளைக் கேட்கின்றனர் அதற்குக் கிடைக்கும் பதில்களை சரியான வகையில் மதிப்பீடு செய்கின்றனர். பின்னர், நேற்றை விடச் சிறந்த செயல்பாட்டைத் தருமளவுக்கு இன்றைக்குச் செயல்படுகின்றனர். அடுத்தடுத்த நாள்களில் தொடர்ந்து வளர்ச்சிக்கான விஷயங்களைச் செய்துகொண்டே இருக்கின்றனர்.

அவ்வப்போது அவர்கள் எங்கிருந்து எங்கு வந்திருக்கிறோம் என்பதையும்




திரும்பிப் பார்த்து, அவர்களுடைய செயல்பாட்டை மதிப்பீடு செய்யத் தெரிந்தவர்களாகவும் இருக்கின்றனர். தலைசிறந்த மேனேஜராக வேண்டும் என ஒருவர் நினைத்தால், சரியான கேள்விகளைக் கேட்க வேண்டும்.

**எதிர்பார்ப்பு**

உங்களுக்குக் கீழே பணிபுரியும் பணியாளரிடம் இருந்து எதை எதிர்பார்க்கிறோம் என்பதைத் திட்டவட்டமாக முடிவு செய்ய 'பாஸ்' (BOSS: Brainstorm, Organize, Shrink, Sacrifice Test) என்கிற நடைமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

'ப்ரைன்ஸ்டார்ம்' முறையில் 20, 30 நிமிடங்கள் எடுத்துக்கொண்டு, ஒரு பணியாளர் என்னென்ன விஷயங்களை அலுவலகத்தில் செய்ய வேண்டும் என்று பட்டியலிட வேண்டும் (நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்கு எழுத்து வடிவில் வருகிற மாதிரி இருக்க வேண்டும்!)

'ஆர்கனைஸ்' என்கிற படிநிலையில், அந்தப் பட்டியலில் செய்ய வேண்டிய வேலைகளைத் தொகுத்து (Grouping), நடைமுறைக்கேற்ப வரிசைப்படுத்த வேண்டும். (அதாவது, 11 விஷயங்கள் நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குள் இருக்க வேண்டும்!)

'ஷ்ரிங்க்' என்கிற படிநிலையில், தொகுக்கப்பட்ட அதிமுக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை 10 அல்லது 15 வார்த்தைகளுக்குள் சுருக்கி எழுத வேண்டும்.

'சேக்ரிஃபைஸ் டெஸ்ட்' படிநிலையில் அவ்வாறு உருவாக்கப்பட்ட 11 விஷயங்கள் கொண்ட பட்டியலில் எதையெல்லாம் கழித்து விடலாம் என்ற நோக்கத்துடன் பலமுறை அலச வேண்டும்.

இந்தப் படிநிலைக்குப் பின் இருக்கும் விஷயங்கள் குறைவாகவும் தெளிவாகவும் இருக்கும். இந்தப் பட்டியலை பணியாளர் சுலபத்தில் நினைவில்கொள்ள முடியும். இதைத்தான் நிறுவனம் என்னிடம் எதிர்பார்க்கிறது என்பது அவருக்குத் தெளிவாக நினைவிருக்கும். அப்படி நினைவில் கொள்ள முடிவதால், பணியில் அவருடைய ஈடுபாடும் அதிகமாகும் இல்லையா?" என்று கேட்கும் ஆசிரியர், இந்த நான்கு படிநிலைகளையும் எப்படி சிறப்பாகச் செய்வது என்பதை இந்தப் புத்தகத்தின் மூலம் வழிகாட்டுகிறார்.

**ஐந்து வகையான பணியாளர்கள்**

மனிதர்களை நிர்வகிக்கும் ஒரு முகாமையாளரின் பார்வையில் செயல்பாடு குறித்த கருத்துகள் என்பது ஒரு பணியாளரின் செயல்பாட்டை மேம்படுத்த உதவும் ஒரு வழி என்று சொல்லலாம். இந்த ஐடியா ஒன்றும் சிக்கலானதில்லை. ஃபீட்பேக் கொடுக்க ஒரு டூல் வேண்டும். இந்த டூலின் மூலம் பணியாளரின் செயல்பாட்டை மேம்படுத்தி நிர்ணயிக்கப்பட்ட விளைபயன்களை (ரிசல்ட்டுகள்) உருவாக்குவதையே ஒரு முகாமையாளர் செய்கிறார்.

இந்த ஃபீட்பேக்கைத் தருவதில் ஐந்து விதமான சூழ்நிலைகள் நிலவும். முதலாவது, பணியாளருக்கு ஒன்றுமே புரியாத முற்றிலும் குழப்பமாக இருக்கும் சூழல். இந்த நிலையில் இருப்பவருக்கு வேலையில் இருக்கும் ஒரு சில விஷயங்களோ, பல விஷயங்களோ புரியாத ஒன்றாக இருக்கும். சிறந்த மேனேஜர்கள் இதை ஒரு குறையாகப் பார்க்க மாட்டார்கள். இந்தக் குழப்பம் வராமல் இருக்கத் தேவையானவற்றைச் சொல்லித் தந்து, மீண்டும் இந்தக் குழப்பம் உருவாகாமல் பார்த்துக் கொள்வார்கள். இதனாலேயே தனிநபர் மற்றும் குழுவின் செயல்பாட்டில் முன்னேற்றம் சாத்தியம் ஆகும்.

இரண்டாவது, பணியாளருக்கு அறிவு/திறன் குறைவாக இருப்பது. இந்த விதமான சூழ்நிலையில், ஒரு முகாமையாளர் எதை, எப்படிச் செய்ய வேண்டும் என்று தெளிவாகச் சொல்லி புரியவைப்பார்.

மூன்றாவது, பணியாளர்கள் முற்றிலும் ஈடுபாடற்று இருப்பது. இதுபோன்ற



நிலையில் இருப்பவர்களை எப்படி சரிசெய்வது என்பது குறித்து மேனேஜர் சிந்திப்பார்.

நான்காவது, பணியாளர் குறைந்த அளவு உற்பத்தித் திறன் கொண்டவர் அல்லது அப்படிப்பட்டவராக மாறிக்கொண்டிருப்பது. இது போன்ற நிலையில் அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வு வழங்குவார் சிறந்த மேனேஜர்.

ஐந்தாவது, பணியாளர் நல்ல திறமையான அதிக உற்பத்தித்திறன் கொண்டவராக இருப்பது. இது போன்ற அதிக உற்பத்தித் திறன் கொண்ட நபர்களை பெரும்பாலான மேனேஜர்கள் ஃபீட்பேக்கில் கண்டுகொள்வதில்லை. ஆனால், அதிக உற்பத்தித்திறன் கொண்டவர்கள் ஃபீட்பேக்கை எதிர்பார்க்கச் செய்வார்கள் தானே?!" என்கிறார் ஆசிரியர்.

"ஒரு முகாமையாளராகிய நீங்கள் உங்களுக்குக் கீழே பணிபுரிபவர்களுக்கு என்ன செய்ய நினைக்கிறீர்கள்? அதற்கு அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைத் தெளிவு படுத்திப் பாராட்டு, வளர்ச்சி மனநிலை, தேற்றுதல், தேற வைத்தல் எனப் பல்வேறுவிதமான சரியான பின்னூட்டங்களை அளித்து, எந்தச் சூழ்நிலையிலும் பயமுறுத்தாமல், மனரீதியில் பாதுகாப்பு உணர்வை அவர்களிடம் வளர்த்து, பணியாளர்களின் ஈடுபாட்டை செல்வாக்கால் வளர்த்தெடுத்துக் குறைந்த பணித்திறன் கொண்டவர் களைக் கண்டறிந்து, அதனால் வரும் சிக்கல்களை அவர்களுக்குச் சுமுகமாக உணர்த்தி, வழி நடத்திச் சென்றால் நிச்சயமாக சிறந்த மேனேஜராக உருவெடுக்க முடியும்" என்று சொல்லி முடிகிறது இந்தப் புத்தகம்.

சிறந்த முகாமையாளராக விரும்பும் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய புத்தகம் இது!

**மூன்று வகை முகாமையாளர்கள்**

முகாமையாளர்களைப் பொறுத்தவரை, தலைவர், மனிதர்களை நிர்வகிப்பவர், தனித்தனியாக நிர்வகிப்பவர் (One-on-one) என மூன்று பிரிவாகப் பிரிக்கிறார் ஆசிரியர்.

"தலைவர் என்பவர் தன்மீது சகபணியாளர் வைத்திருக்கும் நம்பிக்கைக்குக் கடுகளவு பாதகமும் இல்லாமல் தன்னுடைய செல்வாக்கைக் கொண்டு, பயன்களை உருவாக்குபவராவார்.

மனிதர்களை நிர்வகிப்பவர் என்பதற்கு, இவர் சகபணியாளர்கள் தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்குக் கடுகளவு பாதகமும் இல்லாமல் அவர்களுக்கு உதவும் வகையிலான பெறுபேறுகளை அடையக் கூடிய வகையிலான காரியங்களைச் செய்பவர். இந்த வகை மேனேஜர்கள், பணியாளர் நலம் கருதியே செயல்படுவார்கள். தன்னுடைய தொழில்சார் வளர்ச்சியை (கரியர் வளர்ச்சி) தவிர்த்துவிட்டு, தனக்குக் கீழே பணிபுரியும் நபர்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் செயல்படுபவர்களாவார்கள்.

ஒன்-ஆன்-ஒன் என்பது, ஒரு மேனேஜர் தனக்குக்கீழ் பணிபுரியும் பணியாளருடன் நேருக்கு நேர் உரையாடுவதைக் குறிப்பதாகும். இந்த வித உரையாடல்கள் பணியாளர்கள் விரும்பும் 'பீப்பிள் மேனேஜருக்கு' மிகமிக அவசியமான டூலாகும்" என்கிறார் ஆசிரியர்.

# எருமைப் பாலில் உள்ள பயன்கள் இயல்புகள்




Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்

இந்த வாரம் எருமைப் பாலின் இயல்புகள், பயன்கள் மற்றும் பசும் பாலுக்கும் எருமைப் பாலுக்குமுள்ள வேறுபாட்டையும் பார்க்கலாம். என்னதான் எருமை கருமையான நிறமாக இருந்தாலும் அதன் பால் பசுப்பாலை விட வெண்மையானது. பீற்றா கரோட்டின் எனும் நிறப்பொருள் தான் பசும் பாலுக்கு மெல்லிய மஞ்சள் நிறத்தைத் தருகிறது. விற்றமின் A உருவாகுவதற்கு இந்த பீற்றா கரோட்டின் பயன்படுகிறது. எருமைகளில் பீற்றா கரோட்டின் அதிகளவில் விற்றமின் A ஆக மாற்றமடைகிறது. இதனால் பால் வெள்ளையாகவே இருக்கும். எருமைப்பாலில் விற்றமின் A உம் அதிகளவில் இருக்கும்.

எருமைப்பாலில் கொழுப்பு, புரதம், கல்சியம், முக்கியமான விற்றமின்களின் சதவீதம் அதிகம். ஒரு கப் பாலை எடுத்தால் (244 ml) பசுப்பாலில் 8 gம் எருமைப்பாலில் 17 g கொழுப்புக் காணப்படும். எருமைப் பாலில் 237 கலோரியும் பசுப்பால் 149 கலோரியும் இருக்கும். புரதமும் குறிப்பாக கேசின் புரதமும் அதிகளவில் இருக்கும். பசுப்பாலில் தண்ணீர் 88% மும் எருமைப் பாலில் 83%மும் இருக்கும். என்னதான் கொழுப்புச் சத்து அதிகம் எருமைப் பாலில் இருந்தாலும் கொலஸ்ரோல் பசும் பாலை விடக் குறைவுதான். இது ஒரு முக்கியமான சுகாதார அனுகூலமாகும். கொழுப்பின் அளவு அதிகம் இருப்பதால் கிறீம் போன்ற இயல்பும் அதிக சுவையும் எருமைப்பாலுக்கு உண்டு.

நெய், வெண்ணை, சீஸ் போன்ற பால் பொருட்களை இலகுவில் செய்ய முடிவதோடு பசுப் பாலை விட அதிகமாக மேற்படி பொருட்களின் உற்பத்தியையும் பெற முடியும். எருமைப் பாலில் அதிகமாக உள்ள கேசின் புரதத்தின் நுண் துணிக்கைகள் (Micelles) மற்றும் கல்சியம் பொஸ்பரஸ் மூலகங்களின் காரணமாகத் திரளும் (coagulation) தன்மை அதிகமாக இருக்கும். இதனால் பல பால் பொருட்களை இலகுவாக செய்ய முடியும். இலங்கையில் எருமைத் தயிரைப் பல ஆயிரம் வருடங்களாக கிராம மட்டங்களிலேயே இலகுவாகச் செய்ய இந்த இயல்பே காரணம்.

பொதுவாகவே எந்த வகையான பால் என்றாலும் கல்சியசத்தை அதிகம் கொண்டிருக்கும். எலும்பு வளர்ச்சிக்கும் எலும்பு உருவாக்கத்துக்கும் கல்சியம் அவசியம். எருமைப்பாலில் உள்ள கல்சியம் பசும் பாலை விட அதிகமாதலால் அது அனுகூலமானது.

கல்சியத்துக்கு மேலதிகமாக எருமைப் பாலில் கேசின் புரதம் இருக்கிறது. இந்த வகைப் புரதம் எலும்பு விருத்திக்கு அவசியமானது. இந்த இரண்டு மூலக்கூறுகள் அதிகமுள்ள எருமைல் பால் Osteophorosis போன்ற நோய்கள் வராமல் தடுப்பதில் உதவக்கூடியது. இது தொடர்பாக எலிகளை கொண்டு செய்த சில ஆய்வுகளில் எருமைப் பாலைக் குடித்த எலிகளின் எலும்பு உருவாக்கமும் அதன் உறுதியும் குறிப்பிடத்தக்க அளவில் மேம்பட்டதை உறுதி செய்துள்ளனர்.

எருமைப் பாலில் அதிகமாக Antioxident மூலக்கூறுகள் உள்ளன. இவை சிதைவடைந்த கலங்களை புதுப்பிக்கத்தக்கன. குறிப்பாக அனுசேபத்தில் உருவாகும் free radicals எனும் கூறுகளை இல்லாமல் செய்யக்கூடியன. இதனால் வயதாதல் தள்ளிப்போகும். பசும் பாலில் 40- 42% ம் எருமைப் பாலில் 56-58% Anti oxidents உள்ளன. எருமைப்பாலில் beta-lacto globulin, விற்றமின் k போன்றன அதிகமாக இருத்தலும் இரத்த அழுத்தம் கட்டுக்குள் இருக்க உதவிகரமாக இருக்கும்.

peroxidase நொதியம் அதிகளவில் இருப்பதால் பசுப்பாலை விட ஓரிரு நாட்கள் கெடாமல் எருமைப்பாலை வைத்திருக்க முடியும். பண்ணையாளர்களின் பாலை கொள்வனவு செய்யும்போது பாலிலுள்ள கொழுப்பு (Fat%) , கொழுப்பல்லாத திடப் பொருட்களின் ( SNF) அடிப்படையிலேயே விலை தீர்மானிக்கப்படும். இந்த இரண்டு இயல்புகளும் அதிகமாகவுள்ள எருமைப் பாலின் விலை அதிகம். மேலும் தண்ணீர் % மும் குறைவு என்பதால் எருமைப்பாலுக்கு கேள்வி அதிகம்.

எனினும் ,எருமைப்பாலை குழந்தைகளுக்குக் கொடுக்கும்போது கூடிய கவனம் எடுக்க வேண்டும். அதிக கொழுப்பு மற்றும் ஏனைய திடப் பொருட்களின் அளவு அதிகம் இருப்பதால் வயிற்றுக் கோளாறுகளை சில குழந்தைகளுக்கு ஏற்படுத்தலாம். மனிதர்களில் கணிசமானோருக்கு பாலை



அருந்தும் போது lactose intolarance எனும் ஒவ்வாமை ஏற்படும். பசும்பாலை விட எருமைப்பாலில் lactose அதிகமென்பதால் அந்தச் சந்தர்ப்பமும் அதிகம். இப்படியாக எருமைப்பாலின் பல விடயங்களை இந்த வாரம் எழுதியுள்ளேன். அடுத்த வாரமும் எருமைகள் தொடர்பாக இன்னொரு விடயத்தை எழுதுகிறேன்.

# யாழ். நகரிலும் "பிக்-மீ" சேவை



- ராஜன் -

"உங்கள் கைப்பேசியில் Pickme app ஐ டவுண்லோட் செய்து உங்கள் பெயர், தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்வதன் மூலமாக இந்தச் சேவையை நீங்கள் இலகுவாகப் பெறமுடியும். அதனைவிட நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்தால் உங்கள் பயணத்துக்கான பற்றுச்சீட்டு, பயணம் முடிவடைந்த உடனடியாகவே உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும்."

Pickme இப்போது யாழ். நகரிலும் பரவலாகச் செயற்படத் தொடங்கியிருப்பதால் நகர மக்களின் நீண்ட கால போக்குவரத்துப் பிரச்சினை பெருமளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றது.

தலைநகரில் இருந்து யாழ். வருபவர்களை அதிர்ச்சியடைய வைப்பதாக இங்குள்ள ஓட்டோக் கட்டணங்களே இருந்துள்ளன.

கொழும்பில் 150 ரூபாவுக்குப் பயணம் செய்யும் தூரத்துக்கு யாழில் ஓட்டோக்காரர்கள் 400 ரூபாவுக்கும் குறையாமல் அறவிடுவார்கள். ஏன் அவ்வாறு அறவிடுகிறோம் என்பதற்கு விளக்கமும் சொல்வார்கள்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக மீட்டர் பொருத்தச் சொன்னால் அதனையும் பெரும்பாலானவர்கள் நிராகரித்தார்கள். அதற்கும் பல காரணங்களைச் சொன்னார்கள். சிலர் மீட்டரைப் பொருத்தியிருந்தாலும் அதன்படி கட்டணங்களை அறவிடுவதில்லை.

இப்போது யாழ்ப்பாணத்தில் Pickme களமிறங்கியிருப்பது ஓட்டோக்காரர்களுக்குக் கொடுத்துச் சலித்துப்போனவர்களுக்குக் கொஞ்சம் ஆறுதல். கடந்த ஒன்றரை - இரண்டு மாதங்களாக அதிகளவு ஓட்டோக்கள் Pickme க்கு மாறியுள்ளன.

யாழ் நகரில்தான் அதிகளவுக்கு Pickme பயன்படுத்தப்படுகின்றது. மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் பாவனை மிகவும் குறைவாகவே உள்ளது.

ஆனால், நகரப் பகுதிகளில் எந்த இடத்திலிருந்துகொண்டு Pickme யைச் செயற்படுத்தினால் 4-5 நிமிடங்களுக்கும் ஓட்டோ ஒன்றைப் பெறக்கூடியதாக இருக்கின்றது குறிப்பிடத்தக்கது. அந்தளவுக்கு அதிகமானவர்கள் Pickme க்கு மாறிவிட்டார்கள் என்பதைக் கடந்த வாரங்களில் புரிந்துகொள்ள முடிந்தது.



வழமையாக நாம் 450 - 500 ரூபா கொடுத்துச் செல்லும் இடத்துக்கு Pickme யில் இப்போது 225 ரூபாவுக்கே செல்ல முடியும். சின்னதாக ஒரு விலைக்கழிவும் இப்போதுள்ளது. இது அறிமுகத்துக்காக இருக்கலாம்.

யாழ் நகரில் Pickme ஓட்டோச் சாரதி ஒருவர் தனக்கு இப்போது தினசரி 15 க்கு குறையாமல் Pickme ஓட்டங்கள் வருவதாகச் சொன்னார். அதனைவிட நேரடியாக வரும் சில ஓட்டங்களும் தனக்குப் போதுமானது என்பது அவரது கருத்து.

Pickme, மோட்டார் சைக்கிளையும் யாழ். நகரில் அறிமுகப்படுத்தியிருக்கின்றது. இதற்கான கட்டணம் இன்னும் குறைவு. அதாவது மோட்டார் சைக்கிளை நீங்கள் தெரிவு செய்தால் தலைக்கவசத்துடன் வரும் ஒருவர் உங்களை நீங்கள் செல்ல வேண்டிய இடத்தில் இறக்கிவிட்டுச் செல்வார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள நம்மவர்கள் பலருக்கும் இந்தத் தகவல் தெரியாது என்பதால்தான் இதனை இங்கு வெளியிடுகின்றோம்.

உங்கள் கைப்பேசியில் Pickme app ஐ டவுண்லோட் செய்து உங்கள் பெயர், தொலைபேசி இலக்கத்தை பதிவு செய்வதன் மூலமாக இந்த சேவையை நீங்கள் இலகுவாகப் பெறமுடியும். அதனைவிட நீங்கள் உங்கள் மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்தால் உங்கள் பயணத்துக்கான பற்றுச்சீட்டு, பயணம் முடிவடைந்த உடனடியாகவே உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும்.

இதில் இன்னுமொரு வசதியும் உள்ளது. உங்களுடைய கடன் அட்டை மூலமாகவே கூட நீங்கள் உங்கள் கட்டணத்தைச் செலுத்த முடியும். அதாவது, கையில் காசைக் கொண்டு அலைய வேண்டிய தேவையும் இல்லை.

கொஞ்சம் சொகுசாகப் பயணம் செய்ய விரும்பினால், Pickme யிடம் சொகுசு கார்களும் உள்ளன. கட்டணம்தான் கொஞ்சம் அதிகம்.

# செயற்கை விவேகம்: கூகிளின் 'ஆழ்மனம்'




- சிவதாசன்

செயற்கை விவேகம் இதைச்செயற்கை நுண்ணறிவு என்ற பதத்தில் சிலர் அழைக்கிறார்கள். நுண் என்பது micro என்பதோடு இணைத்துப் பழகிவிட்டது. அதுபற்றி இன்னுமொரு கட்டுரையில்)- சமீப காலங்களில் புழுதியைக் கிளப்பிப் பலரது பார்வைகளையும் மங்கவைத்து வருகிறது. அது புலன்களிலிருந்து அகலுமட்டும் நமக்கு இந்த வேதனை இருக்கப்போகிறது.

செயற்கை விவேக ஆராய்ச்சியிலும் பாவனையிலும் உலகம் எங்கே நிற்கிறது என்றதொரு ஆய்வுச் சுட்டியை ஐ.பி.எம். நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டிருக்கிறது. அதன் பிரகாரம் இந்த புள்ளி விபரம்:

செயற்கை விவேக ஆராய்ச்சியில் தற்போது இந்தியா உட்பட, குறைந்தது 15 அபிவிருத்தியடைந்த நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. இவற்றில் செ.வி. கத்தைப் பாவிப்பதில், உலக ரீதியில், சீனா (58%), இந்தியா (57%) த்தில் முன்னணியில் நிற்கின்றன.

7,502 வியாபார நிறுவனங்கள் ஏற்கெனவே செ.வி. ஆராய்ச்சியிலும், பாவனையிலும் ஈடுபட்டு வருகின்றன. இந்த 15 நாடுகளிலும் தலா 500 நிறுவனங்கள் வரை இதில் ஈடுபடுகின்றன

35% மான நிறுவனங்கள் ஏற்கெனவே செ.வி. கத்தைப் பாவிக்கின்றன

42% மான நிறுவனங்கள் செ.வி. பாவனை பற்றி ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றன

உலகில் 30% மான தகவல் தொழில்நுட்ப விற்பன்னர்கள் இத்துறையில் பணியாற்றி வருகின்றனர்

இப்படித் தொழில்நுட்பமும் மதிநுட்பமும் மாறும் வேகத்தைப் பார்த்தால் உலகம் எங்கோ விரைவில் இடிவாங்கப்போகிறது என்ற அச்சம் உங்களுக்கும் வராமலில்லை. செயற்கை விவேகத்தினால் வரக்கூடிய ஆபத்துக்கள் பற்றி அவற்றை உருவாக்கியவர்களே அச்சமுற்று எல்லாவற்றையும் தூக்கியெறிந்துவிட்டு ஓடியிருந்தனர். இதில் முன்னணியிலிருந்த கூகிள் இவ்வாராய்ச்சியைத் தூக்கில் தட்டில் வைத்துவிட்டிருந்தது. இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து மைக்கிரோசொட் போன்ற நிறுவனங்கள் இடைவெளியில் நுழைந்து தமது இலாபத்தைப் பெருக்க முயற்சி செய்தன. இதனால் தார்மீக ரீதியில் பின்வாங்கிக்கொண்ட கூகிள் வியாபார ரீதியில் பெரும் பின்னடைவைச் சந்தித்தது. வேறு வழிகள் இல்லாமல் இப்போது அது தனது செ.வி. ஆராய்ச்சியை முடுக்கிவிட்டிருக்கிறது.

### உருவாக்கச் செயற்கை விவேகம்

செயற்கை விவேகம் இப்போது இரண்டு வகைகளாகப் பேசப்படுகிறது. ஒன்று பொதுவான செ.வி (General A.I.) மற்றது உருவாக்க செ.வி. (Generative A.I.) பொதுவான செ.வி. தனக்குத் தரப்பட்ட தரவுகளைத் தொகுத்து ஆராய்ந்து ஒரு முடிவை எட்டுகிறது. அல்லது தனக்குத் தரப்பட்ட ஏவல்களைத் தரப்பட்ட தரவுகளுக்கிணங்கச் செய்கிறது. உதாரணம் எலெக்ட்றோனிக் தொலைபேசி பதிலாளர். (electronic telephone assistant)ஆனால் உருவாக்க செ.வி. தரப்பட்ட தரவுகளோடு கூடவே அவற்றுக்கு இணையான தரவுகளையும் தேடிப்பிடித்து எல்லாவற்றையும் முறையாக அடுக்கி விடையைத் தருகிறது. உதாரணம் கொம்பியூட்டர் ஸ்கிரீன். இதற்கு மட்டும் ஒரு வகுப்பு:

இப்பொழுது நாம் பார்க்கும் தொலைக்காட்சியில் படங்கள் மின்னி மின்னி (flickering) கண்களைத் தொந்தரவு செய்யாமலிருக்கவென RCA நிறுவனம் ஒரு புதிய தொழில்நுட்பத்தை 1932 இல் அறிமுகம் செய்தது. இதற்குக் காரணம் அப்போது இருந்த தொழில்நுட்பத்தின் வேகம் போதாமையால் ஒரு பிம்பத்துண்டு கண்ணினால் கிரகிக்கப்பட்டு சில மைக்கிரோ செக்கண்டுகள் கழித்தே இரண்டாவது பிம்பத்துண்டு கண்ணுக்கு வந்து சேரும். ஒரு பிம்பத்தைத் துண்டுதுண்டாக்கி அனுப்பிப் பின்னர் தொலைக்காட்சிக் கருவியில் ஒன்றிணைப்பதுவே தொலைக்காட்சித் தொழில்நுட்பம். கண்ணின் வேதனையைத் தவிர்க்கவெனக் கண்டுபிடிக்கப்பட்டதே இந்த இடைச்செருகல்.

இடைச் செருகல் (interlacing) தொழில்நுட்பம் என அறியப்பட்ட இது, தெரிந்த இரு தரவுகளை வைத்துக்கொண்டு இடைநடுவில் ஒரு தரவைக் கணித்து உருவாக்கி ஒரு பிம்பத்துண்டை உருவாக்கி அதுவும் உண்மையானதே எனக் கண்களைப் பேய்க்காட்டிவிடுகிறது. இதுபோலத்தான் இந்த உருவாக்க செ.வி. கழும் கொடுக்கப்பட்ட தரவுகளுக்கு ஏறத்தாழ நெருக்கமான தரவுகளைத் தேடிப்பிடித்து இடைச்செருகி ஒரு நம்பகத்தன்மை வாய்ந்த 'பொருளை' உருவாக்கிவிடுகிறது. இத் தொழில் நுட்பம் பழையதானாலும் தற்போது அசுர வேகத்தில் முன்னேறும் கணினிகளின் வேகமும், கூகிள் போன்ற நிறுவனங்களால் சேகரிக்கப்பட்டுச் சேமிக்கப்பட்டுள்ள தரவுகளுமே இதைச் சாத்தியமாக்கியுள்ளன.

### தடங்கல்கள்

செயற்கை விவேகத்தை முழுமையாக நம்புவதற்குப் பலர் மறுக்கிறார்கள். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், உயர்தர பாடசாலைகளில் மாணவர்களும் ஆசிரியர்களும் செ.விவேகத்தைப் பாவித்துத் தமது வினாக்களையும் விடைகளையும் தயாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் மூளை விருத்தி மந்தமடையச் சாத்தியமிருக்கிறது என எச்சரிக்கப்படுகிறது. ஆனாலும் செ.வி.யின் மிகப்பெரிய ஆபத்து பாவனைக்கென அது திரட்டும் தரவுகள் பல




> கூகிள் தற்போது அறிவித்திருக்கும் அடுத்த திட்டம் பாவனையாளருக்கு வாழ்வியல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது. உதாரணத்துக்கு ஒருவர் தனது காதல் பிரச்சினை பற்றி செயற்கை விவேகத்திடம் அழுது புலம்பி ஆலோசனை கேட்கலாம். அல்லது மருத்துவர்களுடன் உரையாட முடியாத சில பிரச்சினைகளுக்கு சில செக்கண்டுகளில் ஆலோசனையைப் பெறலாம். உளவள ஆலோசகர்களது வேலைகளைப் பறிக்கப் போகும் இத்திட்டம் பற்றி ஏற்கெனவே பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன

பிரத்தியேகமானவை. இதை யார் எப்போது திருடப்போகிறார்கள் எனத் தெரியாது.

இன்னுமொரு விடயம் தகவல்களின் உண்மைத்தன்மை. கணினிப் பாவனையாளர்கள் இடும் தகவல்களை உருவிச் சேகரிப்பதன் மூலமே கூகிள் போன்றவை தமது சேமிப்பை அதிகரிக்கின்றன. தம்மிடம் தகவல்களைக் கேட்டு வருபவர்களின் இருப்பிடங்கள், ஆசைகள், அபிலாசைகள், வாழ்வியல் முறைகள் போன்றவற்றை வைத்துக்கொண்டு அவை சில முடிவுகளைக் கட்டி விடுகின்றன. உதாரணத்திற்கு உங்கள் முகநூல் நண்பர் ஒரு மோட்டார் சைக்கிள் பைத்தியம் என்றால் உங்களுக்கும் அது இருக்கும் என ஓரளவு ஊகிக்கலாம்.

இதற்கு மேல் உங்கள் உரையாடல்களை உற்று அவதானித்து கூகிள் இதை உறுதிசெய்துவிடும். இத் தகவலை அது மோட்டார் சைக்கிள் நிறுவனங்களுக்கு விற்றுவிடும். உங்களைப் பற்றி ஒரு profile ஐக் கட்டமைக்கும்படி நீங்கள் செ.வி.கத்தைக் கேட்டால் அது கட்டப் போகும் கதையில் "நீங்கள் சிறுவனாக இருக்கும்போதே மோட்டார் சைக்கிளில் பிரியம். அப்பா முதன் முதலில் ஒரு ஸ்கூட்டர் வாங்கித் தந்தார்" எனக் கதைவிடும். இப்படி இடைச்செருகல்களுக்காக உங்களுக்காகச் சேமிக்கப்பட்ட தகவல்களுக்கு என்ன நடக்கப் போகிறது?

அநேகமான நிறுவனங்கள் செ.வி. பக்கம் நாடுவது தமது பணியாளர்களைக் குறைத்து இலாபத்தை அதிகரிப்பதற்காக. ஏற்கெனவே ஐ.பீ.எம் 8000 பணியாளர்களை நீக்க முடிவெடுத்துவிட்டது. இதனால் தொழிலாளர் சங்கங்களின் வேலை நிறுத்தங்கள் பல தடங்கல்களையும் கொண்டு வரப்போகிறது.

### நன்மை தீமைகள்

சூழல் பாதுகாப்பு விடயங்களில் செ.வி.த்தின் பாவனை மிகவும் பயனுள்ளதாக இருக்கப்போகிறது. கடந்த பல நூறு ஆண்டுகளாகச் சேகரிக்கப்பட்ட வானவியல் தடயங்களையும் தரவுகளையும் கொண்டு சூழல் எதிர்கொண்டுவரும் மாற்றங்களுக்கான முன்கூட்டிய எதிர்வினைகளை (proactive response) செயற்கை விவேகம் மூலம் உய்த்துணரும் வல்லமை உண்டு என நிபுணர்கள் கருதுகிறார்கள். இதனால் செ.விவேகத்தின் உபயோகத்தை ஊக்குவிக்கும் தரப்புகளோடு சூழலியலாளரும் இணைந்து கொள்கின்றனர். ஆனால் சேகரிக்கப்பட்ட தரவுகள் மூதல் அவற்றை ஆராயும் செயலிகள் வரை அவற்றின் மீது பூரணமான நம்பிக்கை இன்னும் முற்றாக வரவில்லை எனவே கூறப்படுகிறது.

### கூகிளின் 'ஆழ்மனம்'

இந்நிலையில் கூகிள் தற்போது அறிவித்திருக்கும் அடுத்த திட்டம் பாவனையாளருக்கு வாழ்வியல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது. உதாரணத்துக்கு ஒருவர் தனது காதல் பிரச்சினை பற்றிச் செயற்கை விவேகத்திடம் அழுது புலம்பி ஆலோசனை கேட்கலாம். அல்லது மருத்துவர்களுடன் உரையாட முடியாத சில பிரச்சினைகளுக்குச் சில செக்கண்டுகளில் ஆலோசனையைப் பெறலாம். உளவள ஆலோசகர்களது வேலைகளைப் பறிக்கப்போகும் இத்திடடம் பற்றி ஏற்கெனவே பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இதற்காக ஓர் ஆரம்ப




நிலை நிறுவனமான Scale Ai ia $7.3 பில்லியன் டாலர்களுக்கு கூகிள் வாங்கியுள்ளது. 100 க்கு மேற்பட்ட கலாநிதிகள் (PhD's) இதற்காகப் பணியாற்றுகின்றனர். Google DeepMind என்ற பிரிவின்கீழ் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

பல ஆரோக்கிய ஆலோசனைகளை வழங்கும் நிபுணர்கள் கூகிளின் இத்திட்டம் குறித்து அச்சம் தெரிவித்துள்ளார்கள். ஏற்கெனவே பல Chatbots மூலம் வழங்கப்படும் தவறான ஆலோசனைகள் அச்சேவைகளைத் தடைசெய்யுமளவுக்குப் போயுள்ளன. சில மனநோயாளிகள் இவ்வாலோசனைகளின் மூலம் உயிர்துறக்க நேரிட்டால் காப்புறுதி நிறுவனங்கள் தமது கொடுப்பனவுகளை நிறுத்திவிட இது வாய்ப்பளிக்கும். இதைத் தவிர்க்க கூகிள் தனது சேவைகளைப் பாவிப்பவர்கள் ஏற்கெனவே பொறுப்புத் துறப்பு (disclaimer) ஒப்பந்தங்களில் கையெழுத்திடவேண்டுமென நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இருப்பினும் எத்தனைபேர் இவற்றை வாசித்து உடன்படுகிறார்கள் என்பது கேள்விக்குறியே.



# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

எனக்குச் சின்ன வயதில இருந்து எண்ணுறது எண்டது ஒரு பெரிய பொழுது போக்கு இல்லாட்டில் விளையாட்டு எண்டு தான் சொல்ல வேணும். ஆச்சி குசினியில பாவிச்சுப் போட்டு போடுற புளியங்கொட்டை எல்லாம் எடுத்துக் குவியலாக்கிப் போட்டு எண்ணுவன் இல்லாட்டில் அதுகளை அடுப்பிலை போட்டு சுட்டுப்போட்டு உடைச்சு எடுத்து எண்ணுவன். இல்லாட்டில் கிழக்கு வளவுக்கை கிடக்கிற சறளைக் கும்பியில இருக்கிற சறளைக் கல்லுகளை குஞ்சுக் கடகத்தில அள்ளிக்கொண்டு வந்து முத்தத்தில போட்டு எண்ணுவன்.

பனங்காய் சீசனிலை மாடு சூப்பின ஆக்கள் சூப்பின பனங்கொட்டையளை வளவுவழியை போய் பொறுக்கிக் கொண்டு வந்த பனங்கொட்டையளை எல்லாம் கும்பலாக் குவிச்சுப் போட்டு எண்ணுவன். பிறகு உப்பிடியே கிழங்குச் சீசனிலை கிழங்கு பிடுங்கின பிறகு காயப் போட்ட ஊமல் கொட்டையளை குவிச்சுப் போட்டு எண்ணுவன். உப்பிடியே தண்ணி அள்ளப் போகேக்கை ஒழுங்கைவழியை மாடுகள் எத்தினை இடத்தில சாணி போட்டிருக்குது எண்டும் எண்ணுவன். உந்த நேசரியிலை சேர்ந்த பிறகும் கணக்குச் செய்ய வெளிக்கிட விரல்களைப் பாவிச்சு அதுகும் கைவிரல்கள் எண்டில்லை பத்தாட்டி கால் விரல்களையும் பாவிச்சு எண்ணுவன். வேப்பம்பழ சீசனிலை விழுகிற பழங்களை பொறுக்கிக் காயப் போட்ட கொட்டையளையும் குவிச்சுப் போட்டு எண்ணுவன்.

பிள்ளையார் கோயிலுக்குப் போனன் எண்டால் எத்தினை பேர் எத்தினை தேங்காய் உடைக்கினம் எண்டு எண்ணுவன் அதிலும் வருசப் பிறப்புக்கு தேருக்கு முன்னால குவிச்சு வைச்சிருக்கிற தேங்காயளை சுத்தி சுத்தி வந்து எண்ணுவன். இப்பிடியே வளவுக்கை நிக்கிற மாமரம் எத்தினை காய் காச்சிருக்கு முருங்கை மரம் எத்தினை காச்சு இருக்கு எண்டும் எண்ணிக் கொண்டிருப்பன். காகம் கிளி கொக்குப் பறந்தாலும் அண்ணாந்து பாத்து எண்ணிக் கொண்டிருப்பன். பக்கத்து வீட்டில அடை வைச்சு கோழி எத்தினை குஞ்சு பொரிச்சிருக்கு எண்டெல்லாம் எண்ணுவன்.

ஆகலும் பொழுது போகாட்டில் சாமி அறையுக்கை கிடக்கிற உண்டியலை ஓட்டைக்குள்ளாலை தென்னம் ஈக்கை விட்டு ஒட்டி காசுகளைக் குலுக்கி எடுத்து எண்ணி எண்ணிக் கொண்டிருப்பன். சிலவேளை உப்பிடி எண்ணுறதப் பாத்துப் போட்டு ஆச்சி என்ன எண்ணி எண்ணிக் கொண்டே இருக்கிறாய். ஒரு வேலை வெட்டியும் செய்யிறேல்லையோ எண்டு எண்ணிக் கொண்டு இருக்கிறாயோ எண்டு பேசுவா. இப்பிடி எண்ணுறது எண்டது என்ரை வாழக்கையில ஒரு முக்கியமான தொழிலாப் போச்சு. எண்ணினாத்தானே என்னத்தையும் செய்யலாம் எண்ணாமல் என்னண்டு செய்யிறது. அதால எல்லாரும் எண்ண வேணும். அப்பிடி எண்ணினால் தான் எதுவும் நடக்கும். ஆனால் ஒண்டு சரியானதை எண்ணினால் சரியானது நடக்கும் பிழையானதை எண்ணினால் பிழையானதுதான் நடக்கும். அதாலதான் பெரிய ஆக்கள் எண்ணினபடிதான் எதுவும் நடக்கும் எண்டு சொல்லுறவையாக்கும்.

எண்ணின படி படிச்சன் எண்ணின படி பட்டம் பதவி எடுத்தன் எண்ணின படி காதலிச்சுக் கலியாணம் கட்டினன் பிள்ளைப் பெத்தன். எண்ணின படி உழைச்சன். வீடு வாசல், வண்டி, வாகனம், நகை நட்டு காணி பூமி எண்டு சேர்த்தன். எண்ணி எண்ணி நிறைய கவிதை, கட்டுரை, கதை, நாடகம் எண்டு எழுதினன் புத்தகங்கள் போட்டன். எண்டாலும் இப்பிடிச் செய்யமுதல் கனதரம் என்ன செய்யலாம் எப்ப செய்யலாம் எப்பிடிச் செய்யலாம் எங்க செய்யலாம் செய்ய என்ன என்ன தேவை எண்டு நிறைய எண்ணி எண்ணித்தான் உதுகளைச் செய்தனான். இப்பிடி எண்ணி எண்ணி எவ்வளவோ விசயங்கள் துணிஞ்சு செய் திருக்கிறன். உதைத்தான் திருவள்ளுவரும் எண்ணித் துணிக கருமம் எண்டு சொன்னவராக்கும்.

அதால நான் முந்திச் சொன்ன மாதிரி உந்த எண்ணுறதை என்னால ஒருக்காலும் விடேலாது அதுமாதிரி ஒருத்தரும் எனக்கு எண்ணத் தெரியாது எண்டு சொல்லவும் ஏலாது. இப்பவும் சம்பளம் எடுத்த உடன எண்ணுவன். கடன் அட்டைக்கு எவ்வளவு பாங்க் லோன் எவ்வளவு தண்ணி பில் கரன்ட் பில் எவ்வளவு டெலிபோன் பில் எவ்வளவு பள்ளிக் கூடச் செலவு எவ்வளவு கறி புளி சாமான் சக்கட்டு வாங்க எவ்வளவு மருந்து மாத்திரை வாங்க எவ்வளவு எண்டு எண்ணி எண்ணித்தான் என்ரை வாழ்க்கை போகுது. எங்கடை ஆச்சி நெடுகவும் சொல்லுற ஆலோசனை ஆரெண்டாலும் எண்ணி எண்ணித்தான் வாழவேணும் எண்ணாமல் வாழ்ந்தால் வாழ்க்கை மண்ணாகித்தான் போகும் எண்டுவா.

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.09.2023இல் வெளியிடப்பெற்றது.

# வேலை வாய்ப்பு
## வரி விளம்பரங்கள்

## அலுவலக வேலை வாய்ப்பு

**அலுவலக ஊழியர்கள்**
**நிறுவனம்** : SSTசன்சக்திரேடர்ஸ்
**தகைமை** : O/L , A/L
**வயது** : 20 - 30
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : இல - 395, கண்டி வீதி, மாம்பழம் சந்தி, யாழ்ப்பாணம்.
0212217994, 0775930335

**காசாளர்**
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0779079888

**சிட்டை எழுதுனர்**
பால் : இருபாலாரும்
தொடர்புகளுக்கு : 0779079888

**உதவிக் கணக்காய்வாளர்**
**நிறுவனம்** : Kandy villa Hotel
**தகைமை** : ஆங்கில மொழியாற்றல் கணினியறிவு
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
சுயவிபர கோவையை அனுப்புவதற்கு: chairman@srimal.com & directori@srimal.com

**ஆசிரியர்**
**நிறுவனம்** : ST.JOHN'S COLLEGE
**தகைமை** :ஆங்கில மொழி முலம் Science English medium
சுயவிபரக் கோவையை அனுப்புவதற்கு: அதிபர், சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
முடிவுத் திகதி : 20.09.2023

**காசாளர்**
நல்ல சம்பளம் மற்றும் தங்குமிட வசதியுண்டு
**முகவரி** : இல - 150C, ஹைலெவல் வீதி, நுகேகொட
**தொடர்புகளுக்கு** : 0112812737

**அலுவலகப் பணியாளர்**
**நிறுவனம்** : Romax Matals
**பணியிடம்** : கொழும்பு
**வயது** : 40இற்கு மேல் (மலையகத் தமிழர்)
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**முகவரி** : Romax Matals, No - 166, Central road, Colombo - 12.
**தொடர்புகளுக்கு** : 0777369100



**பண்ணைப் பணியாளர்**
**வயது** : 20 - 30
**சம்பளம்** : 57000.00
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**தொடர்புகளுக்கு** : 0717629763, 0766869500

**விருந்தினர் விடுதிப் பராமரிப்பாளர்**
**நிறுவனம்** : Sri Sai Holiday Inn
**விண்ணப்ப இறுதி திகதி** : 22.09.2023
**முகவரி** : இல - 132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**தொடர்புகளுக்கு** : 077 6078888

**விளக்குத் தூண் தயாரிப்பாளர்**
**வயது** : 23 - 45
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**தொடர்புகளுக்கு** : 0775989475, 0710198518

**Painter**
**நிறுவனம்** : Uthaya hotel
**பணியிடம்** : கடவத்தை
**முகவரி** : கண்டி வீதி, கடவத்தை
**தொடர்புகளுக்கு** : 0777827218

**பணிப்பெண்**
**பணியிடம்** : கொக்குவில், யாழ்ப்பாணம் (இரு வயதானவர்கள் )
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : 076 3962454.

**வெளிநாட்டு வேலை வாய்ப்பு**
**நிறுவனம்** : Hybrid International hub (pvt) Ltd
**பணியிடம்** : றோமானியா
**வேலை** : மின்னியலாளர், தொழிற்சாலை வேலை
**தொடர்புகளுக்கு**: 0212221265 , 0762500098

## உணவக வேலைவாய்ப்பு

**சமையல்காரர்**
**பணியிடம்** : தெஹிவளை
**பால்** : தமிழ்ப்பெண்
**சம்பளம்** : 80000.00 - 90000.00
**தொடர்புகளுக்கு** : 0740684477

**தேனீர் தயாரிப்பாளர்**
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0779079888

**பொதியிடல் பணியாளர்**
**பணியிடம்** : தெஹிவளை
**பால்** : தமிழ்ப்பெண்
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**அனுகூலம்** : போக்குவரத்துச் செலவு தரப்படும்
**தொடர்புகளுக்கு** : 0740684477

**உணவு தயாரிப்பாளர்**
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0779079888

**உணவு பொதி செய்பவர்**
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 0779079888

**கொத்து,சிற்றுாண்டி தயாரிப்பாளர்**
**பணியிடம்** : கொட்டாவ
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**தொடர்புகளுக்கு** : 0776554837

**தலைமைச் சமையலாளர்**
**நிறுவனம்** : Hotel Oviya
**தகைமை** : இந்திய மற்றும் சைனீஸ் உணவு தயாரித்தல்,
**அனுபவம்**: குறைந்தது 8 வருட அனுபவம்
**சம்பளம்** : கவர்ச்சிகரமான சம்பளம்
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு

**சமையலாளர்**
**நிறுவனம்** : Hotel Oviya
**தகைமை** : இந்திய மற்றும் சைனீஸ் உணவு தயாரித்தல்
**அனுபவம்**: குறைந்தது 3 வருட அனுபவம்
**சம்பளம்** : கவர்ச்சிகரமான சம்பளம்
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு

**களஞ்சியக்காப்பாளர்**
**நிறுவனம்** : Hotel Oviya
**தகைமை** : வேலை அனுபவம் மற்றும் ஏனைய பொதுத் தகைமைகள்
**சம்பளம்** : கவர்ச்சிகரமான சம்பளம்
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு

**உணவகப் பணியாள்**
நல்ல சம்பளம் மற்றும் தங்குமிட வசதி
**முகவரி** : இல - 150C, ஹைலெவல் வீதி, நுகேகொட
**தொடர்புகளுக்கு** : 0112812737

**பாத்திரத் துாய்மைப்படுத்துனர்**
நல்ல சம்பளம் மற்றும் தங்குமிட வசதி.
**முகவரி** : இல - 150 C, ஹைலெவல் வீதி, நுகேகொட
**தொடர்புகளுக்கு** : 0112812737

# வேலை வாய்ப்பு




வரி விளம்பரங்கள்

## பணியாளர்

**தோட்டப் பணியாளர் (குடும்பமாக)**
**பணியிடம்** : வவுனியா
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**தகைமை** : தோட்ட வேலை அனுபவம் மற்றும் உழவு இயந்திரம் ஓடத்தெரிந்திருத்தல்
**தொடர்புகளுக்கு** : 0764574400

**பண்ணை வேலையாட்கள்**
**நிறுவனம்** : Complete House of organics (ptd) ltd
**பணியிடம்** : ஆனைமடுவ, முதலைக்குளிய.
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**தொடர்புகளுக்கு** : 0773632402

**புடவைக் கடை பணியாளர்**
**பணியிடம்** : மட்டக்களப்பு
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**சம்பளம்** : 40000.00 தரகுப்பணம்
**தொடர்புகளுக்கு** : 0768975867

**நிறுவனம்** : பால் மா ஐஸ்கிறீம் தொழிற்சாலை
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**வேலை நேரம்** : 8 மணித்தியாலம்
**அடிப்படைச் சம்பளம்** : 58000.00
**தொடர்புகளுக்கு** : 0769202345

**நிறுவனம்** : நூாடில்ஸ் தொழிற்சாலை
உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**பால்** : இருபாலாரும்
**அடிப்படைச் சம்பளம்** : 55000.00
**தொடர்புகளுக்கு** : 0742091234

**சலூன் பணியாளர்**
**நிறுவனம்** : சலூன்
**பணியிடம்** : கொழும்பு
**வயது** : 20 - 40
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : 075 7270809, 077 8280991

**உணவக வேலை**
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
உணவகம்நடத்த தெரிந்தவர்/பங்குதாரர்
**தொடர்புகளுக்கு** : 0773307073

**முகாமையாளர்**
**நிறுவனம்** : Sri Sai Holiday Inn
**தகைமை** : தமிழ், சிங்களம், ஆங்கிலம், கணினி அறிவு
**விண்ணப்ப இறுதித்திகதி**: 22.09.2023
**முகவரி** : இல - 132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**தொடர்புகளுக்கு** : 077 6078888

**வரவேற்பாளர்**
**நிறுவனம்** : Sri Sai Holiday Inn
**தகைமை** : தமிழ், சிங்களம், ஆங்கிலம், கணினி அறிவு
**விண்ணப்ப இறுதி திகதி** : 22.09.2023
**முகவரி** : இல - 132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**தொடர்புகளுக்கு** : 077 6078888

**விற்பனை உதவியாளர்**
**வயது** : 25இற்கு மேல்
**பால்** : ஆண்
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்

**வாகனச் சாரதி**
**பணியிடம்** : கொழும்பு
**வயது** : 30இற்கு மேல்
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : 0771209998

**சாரதி A/D**
**வயது** : 40இற்கு மேல்
**பால்** : ஆண்
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்

**பராமரிப்பாளர்**
80 வயது ஆண் ஒருவரை பராமரிக்க
**வயது** : 45 - 55
**நேரம்** : பகுதி நேரம்
**பால்** : ஆண்
**தொடர்புகளுக்கு** : 0772109860, 0776583202

**காவலாளர்**
**நிறுவனம்** : Sri Sai Holiday Inn
**விண்ணப்ப இறுதித் திகதி** : 22.09.2023
**முகவரி** : இல - 132, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
**தொடர்புகளுக்கு** : 077 6078888

**பணிப்பெண் / பராமரிப்பு**
வயோதிபரைப் பராமரிப்பவர்
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தொடர்புகளுக்கு** : 0778153300

**காவலாளர்**
**நிறுவனம்** : Sixlions
**பணியிடம்** : கொழும்பு (வீடு, அலுவலகம், உணவகம், விருந்தினர் விடுதி)
**வயது** : 20 - 60
**தொடர்புகளுக்கு** : 0770332617

**விற்பனை ஒருங்கிணைப்பாளர்**
**நிறுவனம்** : ECO EXTRACTS (PVT) LTD
**தகைமை** : ஆற்றல்மிக்க, தகுதி வாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த நிபுணர்.
**அனுபவம்** : குறைந்தபட்சம் 2-3 வருட அனுபவம்.
FMCG இல் அனுபவம் அவசியம்.
சாரதி அனுமதிப்பத்திரம்
மின்னஞ்சலுக்கு உங்கள் CVia அனுப்பவும்.
**மின்னஞ்சல்**: vacancy@ecox.lk
**முகவரி** : ECO EXTRACTS (PVT) LTD
இல : 16/1, தம்மிட வீதி, நீர்கொழும்பு
**தொடர்புகளுக்கு** : 077 1081081/ 0312222959

**கனரக வாகனச் சாரதி**
**நிறுவனம்** : Hardware
**பணியிடம்** : கொழும்பு
தங்குமிட வசதியுண்டு
**விண்ணப்பிக்கும் முறை** : நேரில் வருகை தரவும்
**முகவரி** : இல - 05, குவாரி வீதி, கொழும்பு - 12.
**தொடர்புகளுக்கு** : 0773600132

**விமான நிலையப் பணியாளர்கள்**
**நிறுவனம்** : கட்டுநாயக்க விமான நிலையம்
**வயது** : 18 - 55
**பால்** : இருபாலாரும்
**அனுகூலம்** : உணவு, தங்குமிடம், மருத்துவம், உடை வழங்கப்படும்.
**சம்பளம்** : 68000 இற்கு மேல்
**முகவரி** : இல - 68, கனுவன, ஜா - எல
**தொடர்புகளுக்கு** : 070 4371530

**பகல் நேரப் பராமரிப்பு நிலையத்திற்கான ஆசிரியர்**
**நிறுவனம்** : Angel steps International
**பணியிடம்** : நீர்கொழும்பு
தகைமை :
ECE ( early childhood education) சான்றிதழ் அல்லது பட்டப்படிப்பு
முதலுதவிக் கல்விச் சான்றிதழ்
சிறந்த தொடர்பாடல் திறன்
அர்ப்பணிப்புள்ள சேவை
**நேரம்** : காலை 7 மணி தொடக்கம் மாலை 7 மணி வரை
**தொடர்புகளுக்கு** : 077511 6781
Email angelstepinternational@gmail.com

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY
புதன்கிழமை
20.09.2023

# வேலை வாய்ப்பு

## வரி விளம்பரங்கள்




**வேலையாட்கள்**
**நிறுவனம்** : JAFFNA EGG CENTER
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**தகைமை** : Light vehicle License
**தொடர்புகளுக்கு** : 077 851 1265, 075 258 9665

**வேலையாட்கள்**
**நிறுவனம்** : JAFFNA EGG CENTER
**பணியிடம்** : யாழ்ப்பாணம்
**பால்** : ஆண்
**தொடர்புகளுக்கு** : 077 851 1265, 075 258 9665

**வேலையாட்கள்**
**பால்** : இருபாலாரும்
**தொடர்புகளுக்கு** : 077 408 8241

**பராமரிப்புப் பணியாளர்**
**பணியிடம்** : ராகம
**நிறுவனம்** : European BOI Factory
**வயது** : 18 - 22
**நேரம்** : 8 - 5.30
E mail : tropi@eureka.lk
**தொடர்புகளுக்கு** : 0112956799 0114815328

**வாகனச் சாரதி**
**பணியிடம்** : கொழும்பு
**வயது** : 30 வயதிற்கு மேல்
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : 077 1209 998

**பணியாளர்**
**பணியிடம்** : (Three face house wiring)
**வயது** : 18 - 35
**அனுகூலம்** : உணவு மற்றும் தங்குமிட வசதியுண்டு
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
கிராமசேவையாளரின் நற்கான்றிதழ் அவசியம்
**தொடர்புகளுக்கு** : 0777208035

**தச்சுத்தொழிலாளர்**
**பணியிடம்** : நுகேகொட
**நிறுவனம்** :Consolidated Academic Lanka (Private) Limited)
**வயது** : 40 இற்கு கீழ்
**தகைமை** : தொழில் பயிற்சி நிறுவனச் சான்றிதழ்
சேவைச் சான்றிதழ்
கனடாவில் 4 மாத பயிற்சியின் பின் நிரந்தர வேலை வாய்ப்பு. குடும்பத்துடன் கனடா செல்லும் வாய்ப்பு
**தொடர்புகளுக்கு** : இல - 322 - B, ஸ்டேசன் வீதி, நுகேகொட - 1025
சுயவிபரக் கோவையை அனுப்புவதற்கு:
info@academiclanka.com
**தொடர்புகளுக்கு** : 0117688072 0117688071

**குழாய் வேலையாளர்**
**பணியிடம்** : நுகேகொட
**நிறுவனம்** :Consolidated Academic Lanka (Private) Limited)
**வயது** : 40இற்கு கீழ்
**தகைமை** : தொழில் பயிற்சி நிறுவன சான்றிதழ்
சேவைச் சான்றிதழ்
கனடாவில் 4 மாத பயிற்சியின் பின் நிரந்தர வேலை வாய்ப்பு
குடும்பத்துடன் கனடா செல்லும் வாய்ப்பு
**தொடர்புகளுக்கு** : இல - 322 - B, ஸ்டேசன் வீதி, நுகேகொட - 1025
சுயவிபரக் கோவையை அனுப்புவதற்கு : info@academiclanka.com
**தொடர்புகளுக்கு** : 0117688072 0117688071 0117688071

**மின்னியல் தொழிலாளி**
**பணியிடம்** : நுகேகொட
**நிறுவனம்** :Consolidated Academic Lanka (Private) Limitrd)
**வயது** : 40 இற்கு கீழ்
**தகைமை** : தொழில் பயிற்சி நிறுவன சான்றிதழ், சேவைச் சான்றிதழ்
கனடாவில் 4 மாத பயிற்சியின் பின் நிரந்தர வேலை வாய்ப்பு
குடும்பத்துடன் கனடா செல்லும் வாய்ப்பு
**தொடர்புகளுக்கு** இல - 322 - B, ஸ்டேசன் வீதி, நுகேகொட - 1025
சுயவிபரக் கோவையை அனுப்புவதற்கு: info@academiclanka.com
**தொடர்புகளுக்கு** : 0117688072 0117688071

**உணவக வேலையாட்கள் (Waiter)**
**நிறுவனம்** : உணவகம்
**அனுகூலம்** : தங்குமிட வசதி
**சம்பளம்** : பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு** : 0774078235

**அலுவலக வேலை வாய்ப்பு**
**பதவி** : உதவிப் பொது முகாமையாளர்
**நிறுவனம்** : Lanka Salt Limited
**தகைமைகள்** :
* **வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**
1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரப் பொறியியல் அல்லது மின் பொறியியல் பட்டம்
2. பட்டப் பின் பட்டம்
3. 10 வருட நிர்வாக நிலை அனுபவம்.
***உள்வாரி விண்ணப்பதாரர்கள**
1. ஐந்து வருட நிர்வாக நிலை தொழில் அனுபவம்
2. பல-ஒழுக்காற்றுக் குழுக்களை வழி நடத்தவும் மற்றும் நிறுவனத்தின் இலக்குகளை அடையப் பொறியியல் திட்டங்களை நிர்வகிக்கவும் நிரூபிக்கப்பட்ட திறன்.
**பணியிடம்**: லங்கா சால்ட் லிமிடெட் தலைமை அலுவலகம் - அம்பாந்தோட்டை
**சம்பள அளவு** :
HM 1-3-&. 186,865 + 15 x 2,270 - 120,915]
**சம்பளப் புள்ளி**: ரூ 86,865/-
**வயது** : 30 முதல் 55 வயதுக்குள் இருக்க வேண்டும். இருப்பினும், உயர் வயது வரம்பு அரசு ஊழியர்கள், மாநில கார்ப்பரேஷன் ஊழியர்கள், போர்ம் உறுப்பினர்கள் அல்லது உள் விண்ணப்பதாரர்களுக்கு பொருந்தாது.
விண்ணப்பத்தை முழு CV உடன் தொடர்புடைய இரண்டு நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரியுடன் பதிவுத் தபாலில் அனுப்பவும்.
E-mail : lankasalt@sltnet.lk
**முடிவுத் திகதி** : அக்டோபர் 02, 2023
**முகவரி** :
தலைவர், லங்கா சால்ட் லிமிடெட், மஹாலேவ்யா, ஹம்பாந்தோட்டை.
**தொடர்புகளுக்கு** : 047-2037305

## பல்கலைக்கழக வேலைவாய்ப்பு

**நிரந்தரப் பதவிகள்**:
மருத்துவ பீடம்
மனநல மருத்துவத் துறை
*விரிவுரையாளர் (தகுதிகாண்)
*விரிவுரையாளர்(உறுதிப்படுத்தப்படாதது)
*Senior lecturer மூத்த விரிவுரையாளர் தரம் II/I
கீழ் உள்ள Google படிவத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் அனைத்து விண்ணபங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
https://forms.gle/kVDcBoculuLs7cQg6
**விண்ணப்பிப்பதற்கு பல்கலைக்கழக இணையத் தளம்** :
(https://cmb.ac.lk/vacancies).

# வேலை வாய்ப்பு
## வரி விளம்பரங்கள்

**சான்றிதழ் :**
தொடர்புடைய கல்வி, தொழில்முறை, பாடநெறிக்கு அப்பாற்பட்ட மற்றும் சேவை சான்றிதழ்களின் சான்றழி கப்பட்ட நகல்களும் கூறப்பட்ட முழு மையான விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்
**மின்னஞ்சல்:**
(recruit@ace.cmb .ac.lk)
**முகவரி :**
பிரதிப் பதிவாளர்/ கல்வி நிறுவனங்கள், கொழும்புப் பல்கலைக்கழகம்,
இல - 94,
குமாரதுங்க முனிதாச மாவத்தை,
கொழும்பு 03
விண்ணப்ப ஐடி மற்றும் விண்ணப்பித்த பதவி ஆகியவை உறையின் மேல் இடது மூலையில் குறிக்கப்பட வேண்டும்.
**இறுதித் திகதி** : 02.10.2023
பதிவாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம் 94, குமர துங்க முனிதாச மாவத்தை,
கொழும்பு 3.

### ஆசிரியர்
**பதவி** : கலை மற்றும் வடிவமைப்பு மூத்த (senior ) பாடசாலை ஆசிரியர்
**பணியிடம்** : கொழும்பு
**தகைமை** : ஆற்றல் மிக்க, அக்கறை மற்றும் உற்சாகம் மிகுந்த நேர்மறையான அணுகுமுறை மற்றும் அனைத்து இசை திறன்களைக் கொண்ட மாணவர்களுடன் பணிபுரியும் மற்றும் அனைத்து ஊழியர்களுடனும் நன்றாக ஒத்துழைக்க விருப்பம் இருக்கவேண்டும்.
சிறந்த ஆங்கில மொழி திறன்,கலை மற்றும் வடிவமைப்பில் பொருத்தமான தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்
•பல்வேறு வயதுக் குழுக்களுக்கு (11 முதல் 19 வயது வரை) கற்பித்தல் அனுபவம்
• IGCSE/O நிலை மற்றும் AS/A நிலை ஆகியவற்றைக் கற்பிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
கேம்பிரிட்ஜ் IGCSE மற்றும் A level விவரக்குறிப்பு விரும்பத்தக்கது.
humanresources@britishschool.lk ஐ தொடர்புகொள்ளவும்.

### விற்பனை நிர்வாகி
**நிறுவனம்** : BEST FOOD MARKETING (PVT) LTD
உலகத் தரம் வாய்ந்த பேரீச்சம்பழங்கள், உலர் பழங்கள் இறக்குமதியாளர்.
**பணியிடம்** : கொழும்பு மற்றும் பிற முக்கிய நகரங்கள்

• FMCG விற்பனையில் குறைந்தபட்சம் 2-3 வருட அனுபவம். கணினி கல்வி
• சிறந்த தொடர்பு மற்றும் பேச்சாற்றல்
• ஆங்கிலம்/சிங்களம்/தமிழ் மொழி அறிவு
*வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம்
hr32bestfoodmarketing@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் CV அனுப்பவும்.
Cc: shiyan@bestfoodsl.lk
**முகவரி** : பொது மேலாளர்,
இல.32/A, பழைய மூர் வீதி,
கொழும்பு 12.
**தொடர்புகளுக்கு** : 0777883935

### உதவிப் பராமரிப்புப் பொறியாளர்
**நிறுவனம்** : GROUP HUMAN RESOURCES MANAGER - HETTIGODA GROUP
**தகைமை** :
இயந்திர /மின் பொறியியல் பட்டம் அல்லது அதற்குச் சமமான பட்டம் டிப்ளோமோ
தொழில்முறை FMCG துறையில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவம் கொதி கலன்கள், காற்று உள்ளிட்ட ஆலை மற்றும் இயந்திரங்களை பராமரிப்பதில் அறிவு மற்றும் அனுபவம்
நீண்ட நேரம்/வார இறுதி நாட்களில் வேலை (தேவையேற்படின்)
தலைமைத்துவத் திறன்
**முகவரி** : இல - 33/3, ஸ்ரீ தர்மராம வீதி, இரத்மலானை.
E- mail : jobs@siddhalepa.com
**தொடர்புகளுக்கு** : 011 272 1360/ 011 273 6914

### தொழில்நுட்பவியலாளர்
**பதவி** : நீராவி கொதிகலன் இயக்குனர்
**நிறுவனம்** : Dwaraka Industries India (Private) Limited
**தகைமை** : குறைந்தது இரண்டாம் தரச் சான்றிதழ், 10 வருட அனுபவம்.
**அனுகூலம்**: உணவுத் தங்குமிட வசதி உண்டு
**முகவரி** : Dwaraka Industries India Private Limited,
இல.852/15, அலுத்மாவத்தை வீதி, கொழும்பு-15
**தொடர்புகளுக்கு**: +94 112333333/ 84/ 85 மொபைல் : +94 773 550558
மின்னஞ்சல்: dwarakainduslanka @gmail.com

## அலுவலக வேலை வாய்ப்பு

### பொது முகாமையாளர்
**நிறுவனம்** : நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
**தகைமை** :
*** வெளி வாரி விண்ணப்பதாரிகள்**
1. இளமாணிப் பட்டம் : விஞ்ஞானம் / பொறியியல்/ வர்த்தக நிர்வாகம் /பொது நிர்வாகம்
மற்றும் விஞ்ஞானம்/ பொறியியல் / வர்த்தக நிர்வாகம்/ பொது நிர்வாகத்தில் பட்டப்பின் படிப்புப் பட்டம்
அத்துடன் குறைந்தபட்சம் முகாமைத் துவ மட்டத்தில் 20 வருட அனுபவம், சிரேஷ்ட முகாமைத்துவத் தரத்தில் 5 வருட அனுபவம்
அல்லது
2. விஞ்ஞானம்/ பொறியியல்/ வர்த்தக நிர்வாகம்/ பொது நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்
மற்றும் பதவிக்கான பாடப் பரப்புடன் சம்பந்தப்பட்ட கலாநிதி பட்டம் அத்துடன் சிரேஷ்ட முகாமத்துவ மட்டத்தில் குறைந்த பட்சம் 5 வருட அனுபவம்
*** உள்ளக விண்ணப்பதாரிகள்**
1. பிரதிப் பொது முகாமையாளர் பதவியில் இரண்டு வருட அனுபவம்
அல்லது
உதவிப் பொது முகாமையாளர் பதவியில் ஐந்து வருட அனுபவம்
அத்துடன் பலதரப்பட்ட குழுக்களை தலைமை தாங்கி வழி நடத்தும் ஆற்றல்
**வயது** : 35 தொடக்கம் 55 (வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் )
**சம்பளம்** : HM 2-1
**விண்ணப்பிக்கும் முகவரி** :தலைவர்
நீர் வளங்கள் சபை
488/A, நாவல வீதி,
கொஸ்வத்த,
ராஜகிரிய.
**முடிவுத் திகதி** : 6.10. 2023

### கல்வி ஆலோசகர்
**தகைமை** : துறைசார் அனுபவம்
சிறந்த மொழி வளம்
மாணவர்களுக்கு வெளிநாட்டு கல்வி, விசா மற்றும் அதற்கான ஆவண ஒருங்கமைப்பைத் தெளிவுபடுத்தும் திறன்
**பால்** : பெண்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
**தொடர்புகளுக்கு** : 0777679094